பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 30 சனிக்கிழமை (12-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:200

# தன்னாட்சி அதிகாரசபை குறித்துப்பேச ஜே.வி.பி. தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு

## இடங்கொடுக்கப் போவதில்லை என அறிவிப்பு

கொழும்பு,ஜூன்12

**இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருப்ப தற்கு அரசுத் தரப்புக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**நாட்டின் மிகமுக்கியமான - இதுபோன்ற - விடயத்தில் தன்னிச்சையாக ஜனாதிபதி முடிவு எடுத்துச் செயற்பட அனுமதிக்கமாட்டோம் என்றும் கொதித் தெழுந்திருக்கிறது ஜே.வி.பி.**

நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஜனாதிபதி நடத்திய பேச்சுக்களின் விவரம் நேற்றைய பத் திரிகைகளில் செய்திகளாக வெளி யாகியிருந்தது. இடைக்காலத் தன் னாட்சி அதிகாரசபை யோசனை குறித்து புலிகளுடன் முதலில் பேச்சு நடத்த அரசு தயார் என்று ஜனாதி பதி தெரிவித்த தகவலுக்கு செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத் திருந்தன. அத்தகவல் ஜே.வி.பியை கடுஞ்சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருக்கி றது. ஜே.வி.பியின் மூத்த தலைவர் ஒருவர் இது குறித்து ஆவேசத்துடன் கருத்து வெளியிட்டார்.

"ஜே.வி.பியுடன் காணப்பட்ட இணக்கப்பாட்டை ஜனாதிபதி மீண் டும் மீண்டும் மீறுகின்றார். இது எதிர் கால நல்லுறவைப் பெரிதும் பாதிக் கும்" எனக் குமுறினார் அவர்.

சமாதானப் பேச்சுத் தொடக்கம் அனைத்துத் தேசியப் பிரச்சினைகள் தொடர்பாகவும் எந்த ஒரு முடிவை யும் எடுக்கும்போது அரசு கூட்டமைப் பின் பங்காளிக் கட்சியான ஜே.வி. பியுடன் கலந்து பேசிய பின்னரே தீர் மானிக்கப்படும் என்று உடன்பாடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மாதங்களுக்குள் மற்றொரு தேர்தலை அறிவிக்கவேண்டிய நிலை

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு,ஜூன்12

நாட்டில் பொதுத் தேர்தல் நடந்து இரண்டு மாதங்கள் மட்டுமே முடிந் துள்ளன. அதற்கிடையில், இன்னுமொரு பொதுத் தேர்தலை அறிவிக்கவேண் டிய தேவை எழுந்துவருகிறது.

- இவ்வாறு அரசின் பிரதான பங் காளிக் கட்சியான ஜே.வி.பி. தெரி வித்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான விமல் விரவன்ஸ எம்.பி. இதனை நேற்று ஊடகவியலா ளர்களிடம் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி யினர் படுத்தும் பாட்டைப் பார்த்துக் கொண்டு எவ்வளவு காலம் பொறுத் துக்கொண்டிருப்பது" எனக் கேள்வி எழுப்பிய அவர், பொதுத் தேர்தல் ஒன்றுக்குத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தினை நிரூபிக்கும் பொருட்டு மீண் டும் ஒரு பொதுத் தேர்தலை அறிவிப் பதே சரியானதாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விமல் வீரவன்ஸவுடன் சேர்ந்து வர்த்தக வாணிபத்துறை அமைச்சர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைச் சிறைச்சாலைக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் விஜயம்

கொழும்பு,ஜூன்12

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 39 தமிழ்க் கைதிகளையும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.ஈழவேந்தன், எஸ்.கஜேந்திரன், எஸ்.சிவநேசன் ஆகியோர் கைதிகளு டன் கலந்துரையாடி அவர்களது பிரச் சினைகளைக் கேட்டறிந்தனர்.

பொது அமைப்புக்கள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடிக்கடி வந்து பார்த்து மருத்துவ வசதிகளை வழங்கினர் என்றும் - ஆனால், தற் போது அவர்கள் வருவது குறைந்து விட்டதாகவும் இதனால், போதிய மருத்துவ வசதி கிடைப்பதில்லை என்றும் கைதிகள் எம்.பிக்களிடம் தெரிவித்தனர். (ஐ-3)

## புதிதாக எம்.பியான வண.அக்மீமன தேரரை நீதிமன்றில் ஆஜராகும்படி அழைப்பாணை

கொழும்பு,ஜூன்12

ஜாதிக ஹெல உறுமயவின் புதிய எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ள வண. அக்மீமன தயாரத்ன தேரரை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்க உத்தரவிடப் பட்டிருக்கிறது கொழும்பு மாவட்ட நீதிமன்றம்.

கடந்த செவ்வாயன்று நாடாளு மன்றத்தில் இடம்பெற்ற களேபரத்தில் பாதிப்புற்ற அக்மீமன தேரர் தற்போது ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஜாதிக ஹெல உறுமயவின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வண. கந்தெளுவ ரத்னசீஹ தேரர் தாக்கல் செய்த மனு ஒன்றின் மீதே தற்போது வண. அக்மீமன தேரருக்கு நீதிமன் றத்தில் ஆஜராக அழைப்பாணை விடுக் கப்பட்டிருக்கின்றது.

தம்மிடமிருந்து பலவந்தமாகப் பெறப்பட்ட ராஜினாமாக் கடிதத்தைப் பயன்படுத்தி தம்மை எம்.பி. பதவியி லிருந்து அகற்றிவிட்டு, அந்த இடத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.தளபதி ஹெலியில் பறந்து யாழ்.நகரைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஒரு நாள் விஜயம் மேற்கொண்ட அமெ ரிக்க - பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். ஜெனரல் ஜேம்ஸ் எல். கம்பெல் இங்கு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை 9 மணிக்கு பலா லிக்கு வந்த அமெரிக்கத் தளபதி அங்கு படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், யாழ்.மாவட்ட இரா ணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுடன் நட்பு றவுடன் கூடிய பேச்சுக்களை நடத் தினார்.

அதைத் தொடர்ந்து காங்கேசன் துறை கடற்படை முகாமுக்கும் அவர் விஜயம் செய்தார். பின்னர், விசேட ஹெலிகொப்டர் ஒன்றில் அமெரிக்கத் தளபதி யாழ். நகரப் பகுதி, தென்ம ராட்சி ஆகிய பிரதேசங்களைச் சுற் றிப் பார்வையிட்டார். பின்னர் முக மாலை சோதனை நிலையத்திற்கும் சென்றார். அங்கு பயணிகளின் போக்குவரத்தை அவதானித்தபின் பலாலி திரும்பிய அவர் நேற்று மாலையே கொழும்பு திரும்பினார்

## அழுக்கவெடி வெடித்ததில் பரந்தனில் நேற்று மூவர் பலி!

கிளிநொச்சி,ஜூன்12

கிளிநொச்சி மாவட்டம், பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் ஓராம் கட்டைச் சந்திப் பகுதியில் நேற்று அமுக்கவெடி வெடித்ததில் மூவர் அந்த இடத்திலேயே பலியாகினர். மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் புல்டோசர் வைத்து ஒப்பந்தப் பணிகளைச் செய்து வந்த குருநாகலைச் சேர்ந்த சிங்கள இனத் தவரான அமரசிங்க தயாரத்ன (வயது 47), நிக்கொட் அமைப்பின் கிளி நொச்சி அலுவலகத்தில் பணியாற் றும் உருத்திரபுரம் சிவநகரைச் சேர்ந்த செல்லத்துரை சுரேஷ் (வயது 27), அதே அமைப்பில் பணியாற்றும் அம்பு ரோஸ் அலொக்ஸ் (வயது 32) ஆகி யோரே உயிரிழந்தவர்களாவர்.

பிரதான வீதியில் இருந்து சுமார் அரைமைல் தூரம் உள்ள வயல் களைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த தமது புல்டோசரைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பும்போதே அமுக்கவெடி வெடித்தது என்று கிளி நொச்சி காவல்துறையினர் தெரிவித் தனர்.

அவர்கள் பயணஞ்செய்த வெள்ளை நிற 'ஹன்டர்' ரக வாகனம் அமுக்க வெடி வெடித்ததில் சின்னாபின்னமா னது. அவர்கள் மூவரும் அந்த இடத் தி லேயே பலியானார்கள்.

சம்பவத்தில் உயிரிழந்த தயா ரத்ன 2 பிள்ளைகளின் தந்தை என் றும், செல்லத்துரை சுரேஷ் 4 மாதங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மாவீரரின் பெற்றோருடன் புலிகள் சந்திப்பு

திருகோணமலை,ஜூன்12

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த 350 மாவீரர்க ளின் பெற்றோர்களை புலிகளின் மாவட்டப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்று சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. புலிகளின் திருகோணமலை மாவட் டக கட்டளைத் தளபதி கேணல் சொர் ணம் மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் மாவீரர்களின் பெற் றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் மற்றும் தேவைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. தேசியத் தலைவர் வே.பிர பாகரனின் விருப்பத்தின் பிரகாரம் இம் மாவீரர்களின் பெற்றோருக்கு உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன. (9)

## பாதுகாப்பு வலயத்தில் மிதிவெடிகளை கண்டுபிடிக்க ஏழு மோப்ப நாய்கள்

### அமெரிக்க நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்12

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வல யம் மற்றும் ஒழுங்குமுறை இன்றி மிதிவெடிகள் புதைக்கப்பட்ட இடங் களில் கண்ணிகளைக் கண்டுபிடிக் கும் பணியில் ஏழு மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அமெரிக்காவில் செயற்படும் மாஷல் சட்ட நிறுவனம் இந்த மோப்ப நாய் களை அன்பளிப்புச் செய்யவிருக்கின் றது.

அந்த நிறுவனத்தின் அதிகாரிக ளும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகளும் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் யாழ். செய லக அதிகாரிகளுடன் கலந்துரையா டிய சமயமே இதனைத் தெரிவித்த னர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வந்து சேர்ந்த அவர்கள் இலங்கை இராணுவப் பொறியியல் பிரிவினர் மேற் கொண்டுவரும் கண்ணி அகற்றும் பணி களைப் பார்வையிட்டனர்.

பலாலியில் படையதிகாரிகளுடன் கண்ணி அகற்றுதலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந் தனர்.

அதைத் தொடர்ந்து யாழ். செய லகத்தில் செயற்படும் கண்ணிவெடி செயற்பாட்டுப் பிரிவுக்கும் வருகைதந் தனர்.

செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, செயற்பாட்டு நிலை யப் பொறுப்பாளர் எல்மோ ஆனந்த ராஜா ஆகியோருடன் அவர்கள் கலந் துரையாடினர். அத்துடன், கண்ணி அகற் றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

அதேவேளை -

அமெரிக்க நிறுவனம் வழங்க வுள்ள மோப்ப நாய்களை கையாள்வ தற்கான பயிற்சிகள் தற்சமயம் எம் பிலிப்பிட்டியவில் உள்ள படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதையில் யுவதி மரணம்; சந்தேகத்தில் கணவர் கைது!

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

வட்டுக்கோட்டையில் முதலியம் மன் கோயில் பகுதியில் கடந்த திங் கட்கிழமை சித்திரவதைக்கு உள்ளாக் கப்பட்டதால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவ ரது கணவன் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை முதலியம்மன் கோயிலடிப் பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான லாடேஸ்வரன் லீலா (வயது 24) என்ற யுவதியே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

இந்த மரணம் தொடர்பாக மல்லா கம் நீதிவான் மரணவிசாரணைகளை நடத்தினார்.

ஏற்கனவே, திருமணம் செய்த வைரவன் லாடேஸ்வரன் (வயது 28)

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தொடர் வேலைநிறுத்தத்தில் குதிப்பதாக யாழ். பல்கலை ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாக நேற்று அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து சங்கம் அடையாள வேலைநிறுத்தங்களை மேற்கொண்டு வந்தது என்றும் -

அக்கோரிக்கைகளை நிறைவேற்ற நிர்வாகம் நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தால் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - சங்கம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

நீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஆரம்பநிலையில் கடமை புரிய அனுமதிக்கப்படுவர் என்றும் -

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழமையாக பாதுகாப்பு நிலைகளில் மட்டும் கடமையில் ஈடுபடுவர் என்றும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ பல்கலைக்கழகப் பதிவாளரின் வெளிநாட்டுப் பயணத்தில் இடம்பெற்ற மோசடிக்கு நடவடிக்கை எடுக்காமை.

★ போதனை சாரா ஊழியரின் பணிகளை தனியார் மயப்படுத்தல்.

★ துணைவேந்தரின் விடுதிக்கு காப்பாளர் நியமனம் விதிமுறைக்கு முரணாக இடம்பெற்றமை.

★ சம்பளப்படி நிலுவையுடன் வழங்கப்படாமை.

★ சேவை மூப்பும் கல்வித் தகைமையும் கொண்டோரைப் புறக்கணித்து குற்றவாளியாகக் காணப்பட்ட சேவை மூப்புக் குறைந்த ஒருவரை பிரதம பாதுகாப்பு அதிகாரியாக நியமித்தமை.

★ பல்கலைக்கழக ஊழியர் சிலருக்கு குற்றப்பத்திரம் வழங்கப்படாமல் தண்டனை வழங்கப்பட்டமை.

★ ஊழியர் இடர் கடன் மீளளிப்புத் தொகை கடன் வழங்கலுக்கு மீளப்பயன்படுத்தாமை. (ஞ-3)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் உள்ளக மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சரோஜினி வேதநாயகம் கலந்துகொள்கிறார். (எ-9)

# பத்திரிகையாளரைத் தூஷித்து தாக்கியதாகப் பொலீஸில் முறைப்பாடு

## நாடாளுமன்ற உறுப்பினர் மீது விசாரணை

கொழும்பு,ஜூன்12

லங்காதீப பத்திரிகையின் மாகாண செய்தி ஆசியர் டபிள்யூ.ஜி.குணரட்ண தூஷிக்கப்பட்டதாகவும் தாக்கப்பட்டதாகவும் செய்யப்பட்ட புகார் ஒன்றையடுத்து ஐ.தே.நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்நாயக்காவும் அவரது மெய்க்காவலரும் பொலீஸ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தொலைபேசி நிலையத்தில் வைத்து மேற்படி பத்திரிகையாளர் தாக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்க்காவலர் அவரது வயிற்றில் உதைத்ததாகவும் பொலீஸில் புகார் செய்யப்பட்டிருப்பதாக கொம்பனி வீதி பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேற்படி உறுப்பினரதும் மெய்க்காவலரதும் வாக்குமூலங்கள் பதியப்பட்டிருப்பதாகவும் மேல் நடவடிக்கைக்காக அவை நதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் பிரதி பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். (ப)

## தண்ணீர் பவுஸர் புரண்டு ஒருவர் பலி!

வவுனியா,ஜூன்12

புளியங்குளம் பகுதியில் கந்தலுக்கமம் என்ற பகுதியில் நேற்றுமுன்தினம் காலை தண்ணீர் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று தடம்புரண்டதில் அதில் சென்றவர்களில் ஒருவர் பலியானார்; மற்றொருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலமும் அங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்த விபத்து நடைபெற்றதால் தமிழீழக் காவல்துறையினர் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க)

# பாதிப்புற்ற பிக்கு எம்.பி. ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றம்

கொழும்பு,ஜூன்12

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காடைத்தனச் சம்பவங்களில் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பியான வண. கொலன்னாவ ஸ்ரீ சுமங்கள தேரர் தற்பொழுது கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அவ்சர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு மூச்சுத் திணத்திணறல் ஏற்பட்டது - அதிக தடவைகள் அவர் வாந்தியும் எடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே வைத்தியசாலை நிர்வாகம் அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தது.

இதேவேளை, வண. அக்மீமன தயாரத்தன தேரரின் உடல்நிலை நல்ல நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

## கலாசார விழா

வலி.மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் கலாசார விழா இன்று பி.ப. 2 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் சந்திரராசா அரங்கில் நடைபெறவுள்ளது. சங்கானை கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்தி, சித்தன்கேணி பிரிவு மக்களின் ஆதரவுடன் நடத்தப்படும் இவ்விழாவுக்கு கலாசாரப் பேரவைத் தலைவரும் வலி.மேற்கு பிரதேச செயலருமான சி.ஏ.மோகன்றாஸ் தலைமை தாங்குகின்றார்.

இந்நிகழ்வில் இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் பிரதம விருந்திரனராகவும், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(நிதி) சுசண்முகரட்ணம், மாவட்ட காணி, பிறப்பு, இறப்புப் பதிவாளர் பி.ஈஸ்வரதாசன் மற்றும் வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-29)

# ஐந்து வைத்தியசாலைகளுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

குடாநாட்டில் ஐந்து பிரதேச வைத்தியசாலைகளுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சார வசதி வழங்கப்படவுள்ளது.

மருதங்கேணி, நயினாதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கே மின்னிணைப்பைப் பெற்றுக்கொள்ள 32 லட்சம் ரூபா செலவில் இந்த மின்கலங்கள் வழங்கப்படவுள்ளன. (8-ரி)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் ஹோல் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (எ-3)

# துறைமுகங்களை தரமுயர்த்தும் கடற்படையினரின் திட்டம்

## அமைச்சர்களிடம் கையளிப்பு

கொழும்பு,ஜூன்12

இலங்கையிலுள்ள அனைத்துத் துறைமுகங்களையும் சர்வதேச மட்டததில் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு உயர்த்துவது தொடர்பான திட்டமொன்றை இலங்கைக் கடற்படையினர் தயாரித்துள்ளனர்.

இத்திட்டம் அண்மையில் கடற்படைத் தளபதி அட்மிரல் தயா சந்தகிரியால் துறைமுக மற்றும் விமானத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள கொழும்பு, காலி, திருகோணமலை, பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களின் பாதுகாப்புக்கும் தரம் உயர்த்துவதற்கும் இந்தத் திட்டத்தில் வசதி காணப்பட்டுள்ளது. சர்வதேச கடல்சார் கரையோர பாதுகாப்பு ஸ்தாபனத்தின் கோரிக்கையின் பேரில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடுகளின் துறைமுகப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து சர்வதேச கரையோரக் கடல் சார் ஸ்தாபனம் அறிக்கைகளைக் கோரி வருகின்றது. குறிப்பிட்ட துறைமுகங்களுக்கு கப்பல்கள் வரும்போது அவைகள் எந்த அளவு பாதுகாப்புடன் இருக்கின்றன என்பதை நிர்ணயிப்பதற்காகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கடற்படையின் திட்டம் அமைச்சர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட துறைமுகங்களின் பாதுகாப்பை கடற்படையின் பாதுகாப்பில் விடவும் வழிசெய்யப்பட்டுள்ளது.

அமைச்சின் வர்த்தகக் கப்பல் பிரிவின் இந்தத் திட்டத்தின்படி துறைமுகப் பாதுகாப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து சகல துறைமுகங்களுக்கும் அவைகளின் தகுதி நிலை பற்றிய ஆவணங்களை வழங்கும். (ப)

## கொச்சிக்கடையில் நாளை பெருவிழா

கொழும்பு,ஜூன்12

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா நாளை மாலை வழிபாடுகளுடன் திருச்சொரூப பவனியுடன் முடிவடைகின்றது. இத்திருவிழா கடந்த 3ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அன்றிலிருந்து நேற்றுவரை நவநாள் வழிபாடுகள் இடம்பெற்றன. இன்று 'வேஸ்பிரன்' ஆராதனையுடன் நாளை மாலை அந்தோனியார் திருச்சொரூப பவனியுடனும் விழா இனிதே நிறைவுபெறுகிறது. (க)

## சிக்காகோ தமிழ்ச் சங்கத் தலைவர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்12

அமெரிக்கா சிக்காகோ தமிழ்ச் சங்கத்தின் தலைவரான எஸ்.பாஸ்கரன் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

இணுவையூரைச் சேர்ந்த இவர் சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமாவார்.

ஒருவாரம் யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருக்கும்போது பல இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கின்றார்.

அமெரிக்காவில தமிழ் வளர்கக்கும் பணியை அவர் நீண்டகாலமாக மேற்கொண்டுவருகிறார். (எ-3)

# தூய ஒளி வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென்.மேரிஸ் வென்றது

குருநகர்,ஜூன்12

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் நடத்திய தூயஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் கழகத்தின் மைதானத்தில் நடைபெற்றன. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் அடிப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அவற்றை கோட்டைவிட்டன.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடத்தில் சென். மேரிஸ் அணிக்கு தண்டஉதை (பனால்டி) ஒன்று கிடைத்தது. அதனை அவர்கள் சரியாக பயன்படுத்தாததினால் கோல் பெறும் வாய்ப்பை இழந்தனர். இரு அணியின் வீரர்களும் கோலை அடிப்பதற்கு பகிரதப்பிரயத்தனம் செய்தபோதும் அது கைகூடவில்லை.

இறுதியில் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலை உதைப்பில் (பனாலடி) 5-4 என்ற கோல் அடிப்படையில் சென். மேரிஸ் வி.கழகம் சம்பியனாகியது. (எ-5-190-51)

# காரைநகருக்கு இரும்பினாலான பாதைப் படகுச் சேவை

## புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாடு

திருகோணமலை,ஜூன்12

காரைநகருக்கு இரும்பினாலான பாதைப் படகுகளை சேவையில் அமர்த்த புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தின்படி ஜோன்சன் என்ற பிரிட்டிஷ் பொறியல் கம்பனி இரும்பினாலான பாதைப் படகுகளைத் தயாரித்து வழங்க ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

திருகோணமலையில் கிண்ணியாவிலும் தலைமன்னாரிலும் கூட இந்த வகையான இரும்புப் பாதைப் படகுகள் சேவையில் அமர்த்தப்படவிருக்கின்றன.

இந்தப் பாதைப் படகுகள் வழங்கும் ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் கம்பனி பெற்றிருந்தாலும் ரிக்கோ டோர்மிலை என்ற உள்ளூர் தனியார் ஸ்தாபனமும் இணைந்தே சேவைகளை வழங்கவிருக்கின்றது. இந்தப் படகுகளுக்கான உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு பாதைகள் உருவாக்கப்படவிருக்கின்றன.

ஏற்கனவே, கிண்ணியாவுக்கான பாதைப் படகு தயாரிக்கப்பட்டுவிட்டது. இது 60 மீற்றர் நளமும் 10 மீற்றர் அகலமும் கொண்டது. 85 தொன் பாரத்தை ஏற்றி இறக்கவல்லது. 120 குதிரை சக்தி கொண்ட இரு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இந்தப் படகில் பிரயாணிகள் உட்பட 8 லொறிகளை ஏற்றி இறக்கமுடியும். பிரயாணிகளுக்கு இருக்கைகளும் உள்ளன.

ஏனைய பகுதிகளிலும் படகு தயாரிக்கும் வேலைகள விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

கிளிநொச்சி, செல்வநகர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 5மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவில் காவடி, தக்குளிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன. (10-13)

★ ★ ★

சுன்னாகம்,ஜூன்12

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா இன்று மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகிறது.

நற்கருணை வழிபாட்டினை அடுத்து நற்கருணைப் பவனி இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கூட்டுத் திருப்பலியுடன் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (10-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்,12

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய ஏகாதசி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் (10-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்12

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஏகாதசி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த உற்சவத்தையொட்டி விசேட அபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும். (10-15)

★ ★ ★

வலி.கிழக்கு,ஜூன்12

வரணி, சிட்டிவேரம் கண்ணகி அம்பாள் ஆலய இரதோற்சவம் இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும். (10-180)

★ ★ ★

குருநகர்,ஜூன்12

ஊர்காவற்றுறை கிழக்கு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (10-51)

★ ★ ★

நவாலி தெற்கு மாரியம்மன் ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு வேள்வி இடம்பெறவுள்ளது.

★ ★ ★

வலி.வடக்கு,ஜூன்12

தெல்லிப்பழை 8ஆம் கட்டை ஒழுங்கை பேரம்பல வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று காலை இடம்பெறவுள்ளது.

இன்று காலை இடம்பெறும் பொங்கல் விழாவில் நூற்றுக்கு மேற்பட்ட கடாக்கள் பலியிடப்படவுள்ளன. (10-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்,12

வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-13-161)

★ ★ ★

சங்கானை,ஜூன்12

சங்கானை அரசடி வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (10-13-29)

★ ★ ★

வட்டுக்கோட்டை,ஜூன்12

அராலி முத்துமாரியம்பாள் ஆலய நவோத்ர சங்காபிஷேகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகம் நடைபெற்று மாலை 7 மணிக்கு அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.(10-13-161)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (10-13)

★ ★ ★


கோப்பாய்,ஜூன்12

கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ தின தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். (எ-72)

# மத்திய கிழக்கில் ஜனநாயகத்தை மேம்படுத்துவது
# ஆபிரிக்க நாடுகளின் கடன்சுமைக்கு நிவாரணம்

மாநாட்டில் உரையாற்றும் அமெரிக்க அதிபர் புஷ்



## ஒற்றுமையை வெளிக்காட்டி நிறைவடைந்தது ஜி-8 மாநாடு

நியூயோர்க்,ஜூன்12

மத்தியகிழக்கு நாடுகளில் ஜனநாயகத்தை மேம்படுத்துவது மற்றும் ஆபிரிக்க நாடுகளின் கடன் சுமைகளிலிருந்து அவற்றுக்கு நிவாரணம் அளிப்பது என்ற திட்டங்களுடன் 'ஜி-8' மாநாடு நிறைவடைந்துள்ளது. ஈராக் விவகாரத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்ற இந்த தொழில் வள நாடுகள் மீண்டும் ஒன்றிணைந்துள்ளன என்பதை இது காட்டி நிற்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கைத்தொழில் முன்னேற்ற நாடுகள் எட்டின் வருடாந்த மாநாடு அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் நடந்து முடிந்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன், கனடா, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா ஆகிய 8 நாடுகளின் தலைவர்களும் அவர்களது துணைவியர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாடு நல்ல முறையில் இடம்பெற்று முடிந்துள்ளது என்று தலைவர்கள் எண்ணுகின்றனர் என பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விடயங்கள் பற்றியும் மாநாட்டில் ஆராயப்பட்டன. இறுதியில் கடன் சுமையால் துன்பப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு அதிலிருந்து நிவாரணம் வழங்குவது என்றும் மத்திய கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளை மேம்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் சமாதானப் பணிகளில் ஈடுபடுவதற்காக சுமார் 50 ஆயிரம் பேர் அடங்கிய உலக சமாதானப்படை ஒன்றை அமைப்பதற்கு 'ஜி-8' மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கில் ஜனநாயகத்தை மேம்படுத்துவதற்காக அமெ ரிக்கா கொண்டுவந்த திட்டம் பல் வேறு திருத்தங்களுக்குப் பின்னர் 'ஜி-8' நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மத்தியகிழக்கு நாடுகளில் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்கு வெளியில் இருந்து திணிப்புக்களை ஏற்படுத்துவதில்லை என்ற திருத்தம் உட்படப் பல்வேறு திருத்தங்களையும் அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது.'

அத்துடன் ஈராக் விவகாரத்தில் நேட்டோவை மேலும் தலையிட வைப்பதற்கான திட்டமும் நிராகரிக்கப்பட்டது.

பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் அத்திட்டத்தை அடியோடு நிராகரித்தார்.

மாநாட்டின் பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிபர் புஷ் தான் நேட்டோவில் இருந்து ஈராக்குக்கு மேலதிக படைகளை எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால், ஈராக் விடயத்தில் பொது உடன்பாடு ஒன்று எட்டப்படுவதைத் தான் மிகவும் வரவேற்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக ஆபிரிக்க நாடுகளின கடன்சுமையைத் தணிக்கும் வகையிலான நிவாரணத்திற்கு 'ஜி-8' நாடுகள் இணக்கம் கண்டன. ஆபிரிக்காவில் உள்ள 27 நாடுகளில் 23 நாடுகள் இந்த கடன் நிவாரணத்தைப் பெறும் என்று தெரிகின்றது.

2006 ஆம் ஆண்டு இறுதிவரைக்கும் இந்த நிவாரணம் அந்த நாடுகளுக்குக் கிடைக்கும், கடன் சுமையில் இருந்து தமது நாடுகளுக்கு விடுதலை தரும்படி ஆபிரிக்க நாடுகள் நீண்டகாலமாக கோரி வருகின்றன. 10 ஆயிரம் கோடி டொலர் கடன்சுமை ஆபிரிக்க நாடுகளின் தலையிலுள்ளது. அதில் 3 ஆயிரத்து 100 கோடி டொலர் பெறுமதியான கடனில் இருந்து மட்டுமே அந்த நாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

உலக வர்த்தக அமைப்பு நாடுகளின் பேச்சுக்களில் வேளாண்மை குறித்த பிரச்சினையில் முன்னேற்றம் தேவை. இல்லையெனில் மற்ற முக்கிய பிரச்சினைகளில் முன்னேற்றம் ஏற்படுவது கடினம் என்று மாநாட்டின் இறுதியில் கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படைப் பண்ணை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதை நோக்கி உலக நாடுகள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் வேளாண்மைச் சந்தையைப் பாதிக்கும் இறக்குமதித் தடைகள் விரைவில் நீக்கப்படும் என்றும் அவை கூறியுள்ளன.

உலக வர்த்தக அமைப்பின் டோஹா மாநாட்டில் கூறப்பட்ட நோகங்களை நிறைவேற்றுவதை நெருங்கி வருகின்றோம். வேளாண்மை தொடர்பான பிரச்சினைகளில் முன்னேற்றம் கண்டால் உற்பத்தி மற்றும் சேவைத துறைகளில் வர்த்தக சுதந்திரம் ஏற்படுவது குறித்தும் பேசலாம்.

ஏற்றுமதிப் போட்டி, உள்நாட்டு ஆதரவு, சந்தை வாய்ப்புக்கள் ஆகிய வற்றில் சீர்திருத்தங்கள் செய்வது குறித்துப் பேசுவதற்கான அடிப்படைகளை ஜூலைக்கு முடிவு செய்ய வேண்டும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கவும் உலகை வளம்பெறச் செய்யவும் சுதந்திர வர்த்தகமே அடிப்படை வர்த்தகத்துக்கான தடைகளைக் குறைத்து உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்சசியை ஒருங்கிணைக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கான மையப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டும் -என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (8)



மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகனின் இறுதிச்சடங்கு நேற்று அமெரிக்காவில் நடைபெற்றது. அவரது பூதவுடலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், மனைவி லாரா ஆகியோர் அஞ்சலி செலுத்தும் காட்சி.

## வெளிநாட்டினருக்கு வேலை வழங்கும் நிறுவனங்களுக்கு அபராதம் வேண்டும்

### பெரும்பாலான அமெரிக்கர்கள் கருத்து

புதுடில்லி,ஜூன்12

அமெரிக்கர்களால் செய்யக்கூடிய வேலைகளை ஆசியாவில் உள்ள வளரும் நாடுகளில் உள்ளவர்களுக்கு வழங்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கவேண்டும் என 60 சதவீத அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

குறைந்த சம்பளம் காரணமாக பல அமெரிக்க நிறுவனங்கள், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உள்ள தொழிலர்ளர்களைத் தமது பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன. 'கோல் சென்டர்' மூலம் தமது தொழிலாளர்களின் சம்பளக் கணக்கைத் தயார் செய்வது, உற்பத்திப் பொருள்கள் தொடர்பான விசாரணைகளுக்குப் பதில் சொல்வது போன்ற பணிகளைச் செய்விக்கிறார்கள். இதனால் அமெரிக்காவில் வேலை வாய்ப்புப் பாதிக்கப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இது குறித்து வேலை வாய்ப்பு சட்ட உதவி அமைப்பு மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் 60 சதவீத அமெரிக்கத் தொழிலாளர்கள் வெளி நாடுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலைஅளிக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

பென்சில்வேனியாவைச் சேர்ந்த இந்த அமைப்பு கடந்த மாதம் 21 முதல் 23 வரையில் அமெரிக்கத் தொழிலாளர்களிடம் இந்தக் கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. அவர்களில் 59 சதவீதம் பேர் அமெரிக்க நிறுவனங்கள் தங்கள் விருப்பம்போல எங்கு வேண்டுமானாலும் வேலையை வழங்க சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

தங்கள் வேலைக்கு ஆபத்து ஏற்பட்டால் அரசிடம் முறையிடுவோம என 52 சதவீதம் பேர் தெரிவித்தனர்.

வேலை இழப்பு ஏற்பட்டால் தொழிலாளர் சங்கத்திடம் முறையிடுவோம் என 37 சதவீதம் பேரும், நீதிமன்றம் செல்வோம் என 21 சதவீதம் பேரும் கூறியுள்ளனர். தாங்கள் பார்த்து வந்த வேலை நாடுகளுக்கு மாற்றப்பட்டு விட்டதால் தங்களின் வேலை. பறி போனதாக 6 சதவீதம் பேரும் தங்களுக்கு தெரிந்த ஒருவர் வேலையை இழந்துவிட்டார் என 30 சதவீதம் பேரும் கூறியுள்ளனர்.

8 சதவீதம் பேர் தாங்கள் எந்த நேரமும் வேலையை இழக்க நேரிடும் என்ற பயத்தில் இருக்கின்றனர் எனக் கூறியுள்ளனர். ஆனால், இதற்கு மாறாக 46 சதவீதம் பேரோ இது ஒரு பிரச்சினையே இல்லை என்றும் பத்திரிகைகள்தான் இதனை ஊதிப் பெரிதாக்கிவிட்டன என்றும் தெரிவித்துள்ளனர்.

வாடிக்கையாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு அவர்களுககுச் சிறப்பான சேவையை வழங்க புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது என கொலராடோ பல்கலைக்கழக பேராசிரியர் வெய்ன் காஸ்யோ கூறியுள்ளார். (8)

## கரடிகள் எண்ணிக்கை சீனாவில் அதிகரிப்பு

பெய்ஜிங்,ஜூன்12

பண்டா கரடிகளின் எண்ணிக்கை சீனாவில் வேகமாக அதிகரித்து வருகிறது. சீனாவில் தற்போது 1,750 கரடிகள் இருந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 1,590 கரடிகள் வனப்பகுதிகளிலும் எஞ்சிய கரடிகள் உயிரியல் பூங்காக்களிலும் வசித்துவருகின்றன.

மிகப்பெரிய கரடிகள் அனைத்தும் சினாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சிச்சுவான் சிகரங்களில் உலாவி வருகின்றன.

### உலக அரங்கில்

## ஆயிரம் ஆண்டுகள் பழமையான வரைபடம் சீனாவில் கண்டுபிடிப்பு

பெய்ஜிங்,ஜூன்12

சீனாவின் சிசுன் மாகாணத்தில் உள்ள புத்த மத ஆலயத்தில் 1130 ஆண்டுகள் பழைமையான சுற்றுலா வரைபடத்தை சீன தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜியாக்ஸி என்ற நகரில் உள்ளது சோங்ஜியாங் புத்த ஆலயம் இதன் நுழைவாயின்மேலே ஒரு மீற்றர் உயரமும் ஒன்றரை மீற்றர் அகலமும் கொண்ட சுற்றுலா வரைபடம் மலைப்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

டாங் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் கி.பி.873 ஆம் ஆண்டில் இந்த வரைபடம் செதுக்கப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மிகவும் பழைமையான இந்த வரைபடத்தில் சோங்ஜியாங் மாகாணத்தில் உள்ள 50 புத்த ஆலயங்கள் 20 கோயில் கட்டடங்கள் என்பன அமைந்துள்ள இடங்கள் மற்றும் மாகாணத்தைச் சுற்றி ஓடும் குஜியாங் நதியின் ஓட்டம் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சீனாவில் சுற்றுலா தொழில் துறை குறித்தும் டாங் மன்னராட்சியில் புத்தமதம் வளர்ந்த விதம் குறித்தும் அறிந்த இந்த சுற்றலா வரைபடம் உதவியாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சோகத்தில் மூழ்கியது மட்றிட்!

ஸ்பெயின் நாட்டில் மட்றிட் நிலையத்தில் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆயிரக்கணககானோர் திரண்டு வந்து பலியானவர்களுக்கு தங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர். அந்தக் காட்சி காண்போரை உருகவைத்தது.

ஸ்பெயின் தலைநகர் மட்றிட் ரயில் நிலையத்தில் அடோசா எக்ஸ்பிரஸ் ரயிலில் கடந்த மார்ச் 11 ஆம் திகதி குண்டுகள் வெடித்தன. இதில் 191 பயணிகள் உயிரிழந்தனர். ஆயிரத்து 900 பேர் படுகாயமடைந்தனர். இந்தக்கோர சம்பவத்துக்கு காரணமானவர்கள் அல்கெய்டா தீவிரவாதிகள்தான் என்று கருதப்படுகிறது.

மட்றிக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்து 90 நாள்கள் ஆகின்றன. இதையொட்டி அந்த ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

ரயில் நிலையம் முழுவதும் மலர் கொத்துக்கள் வைக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கில் மெழுகுவர்த்திகளும் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கானோர் தங்கள் அஞ்சலிச் செய்தியை கண்களில் கண்ணீருடன் பதிவு செய்தனர். (8)

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

**2,000 கிலோ மீற்றர்கள் நீளத்துக்குக் காணப்படும் பாரிய தடுப்புக் கற்பாறைத்தொடர் (Great Barrier Reef) எனப்படும் ஆஸ்திரேலியாவில் உள்ள முருகைக் கற்பாறைத்தொடரே உலகின் மிக நீளமான உயிர்வாழும் அமைப்பாகும்.**

## இறக்குமதியாளர் கவனத்திற்கு!

வருவாய்ப்பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியில் ஈடுபடாத இறக்குமதியாளர்கள் அனைவரையும் 2004.06.30 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக கிளிநொச்சியில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு நேரில்வருமாறு வேண்டுகின்றோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படும் என்பதனை அறியத்தரு கின்றோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
வருவாய்ப்பகுதி - நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.


சுன்னாகம் நகரம் விழாக்கோலம்!



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய

## பெருவிழா

இன்று (12.06.2004) சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும், நற்கருணை பவனியும் நாளை (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியும், திருச்சொருப பவனியும் இடம்பெறுகின்றன.

☞ பெருவிழாக்களின் பின்னர் அன்னதானம் வழங்கப்படும்.
புனித அந்தோனியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

சுன்னாகம். (சி-35534)(34-12-38) - புனிதரின் பக்தன்.


## வெளிநாட்டு வேலை வாய்ப்பா?

இதோ! கவலையே வேண்டாம்
டோகாவா? அல்லது கட்டாரா?

- ★ 20 நாள்களுக்குள் பயணம்
- ★ உணவு இலவசம், சம்பளம் 500 QD
- ★ வேலைநேரம் 8 மணித்தியாலம்
- ★ விரும்பினால் 6 மணித்தியாலம் மேலதிக வேலை

அமெரிக்க நிறுவனத்தில் 150இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் -கைவசம் விசா

நீங்கள் ஜெனரல் லேபர் அல்லது ஹெல்ப்பர் ஆக விரும்பி னால் உடன் தொடர்பு:

A.A.மைக்கல்
0777- 279813

உங்களிற்காக மிக விரைவில் யாழில் கிளை.


## திருமண வாழ்த்தும் அழைப்பும்





அன்புடையீர்,
நாளை (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் இல்லற வாழ்வில் இணையும்



உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி அலோசியஸ்
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### செந்தில்குமரன்

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி கிருஸ்ணபிள்ளை மாரிதேவி
(சின்னத்தங்கச்சி) தம்பதிகளின்
செல்வப் புதல்வி

### பிரியா

அவர்களையும் பதினாறு செல்வமும் பெற்று சீரும்சிறப்புடனும் வாழ வாழ்த்துவதோடு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு.

குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

(C/32946)

12.06.2004

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




### ஜக்ஷன், நிக்ஷன்

மீசாலை மேற்கைச் சேர்ந்த
நாகேந்திரன் அகிலா
தம்பதியினரின் இரட்டைச்
செல்வங்களான

ஜக்ஷன், நிக்ஷன்

ஆகியோர் தமது முதலாவது பிறந்தநாளை 12.06.2004 சனிக்கிழமை இன்று தமது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார்கள்.

ஜக்ஷன், நிக்ஷனை அன்பு அப்பா, அம்மா, தாத்தா அம்மம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா ரவி பெரியம்மா கௌசல்யா, றனோ அண்ணா வதனி அன்ரா கண்ணன் மாமா, ஜேர்மனியில் வசிக்கும் வவிமாமா அத்தை பிள்ளைகள், லண்டனில் வசிக்கும் றூபன்மாமா வவிமாமா அத்தை பிள்ளைகள், லண்டனில் வசிக்கும் றூபன்மாமா உதயன் சித்தா மீசாலையைச் சேர்ந்த குணம் தாத்தா குடும்பம் சின்னத்துரை தாத்தா குடும்பம் கதிரவேலு தாத்தா குடும்பம் குட்டி மாமா குடும்பம், சாவகச்சேரி சண்முகம் வீதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் தாத்தா குடும்பம் சாவகச்சேரியை சேர்ந்த மாமாமார், மாமிமார், பிள்ளைகள் பெரியப்பாமார், பெரியம்மாமார், பிள்ளைகள், உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் கர்த்தரின் கிருபையால் நலமுடன் வாழ வாழ்த்துகிறர்கள்.

(32938) தகவல் : இ.நாகேந்திரன் (அப்பா)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்12

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மழலைகள் கல்விப்பூங்காவின் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு திருமதி கே.பத்மினி தலைமையில் சரஸ்வதி சனசமூகநிலைய முன்றிலில் நடை பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக சமூக அபிவிருத்தி மன்றத் தலை வர் திருமதி என்.ஜெகதீஸனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப் பாளர் திருமதி எஸ்.யோகராசா, அற வழிபோராட்டக் குழுவின் திட்ட இணைப்பாளர் திருமதி எஸ்.மீனலோ ஜினி ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர். (-10)

★ ★ ★

வட்டுக்கோட்டை கஜமுகா முன் பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு.மத்திய கல்லூரி மைதானத்தில்.நடைபெறவுள்ளது.(-4)

## சிறுகதைத்தொகுப்பு வெளியீட்டு விழா

மல்லிகைப்பந்தல் வெளியீடான ச.முருகானந்தனின் 'தரை மீன்கள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளி யீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கிளி நொச்சி நகர கலை பண்பாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் சுஜந்தன் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழா வில் நூலின் வெளியீட்டுரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமு கர் வே.பாலகுமாரனும் ஆய்வுரை யினை நா.யோகேந்திரநாதன், செல்வி மணிமேகலை ஆகியோரும் நிகழ்த்துவார்கள். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாய கம் முதற்பிரதியைப் பெறுவார்.(8-13)


## உங்கள் வாழ்க்கையின் கனவை நனவாக்குகிறோம்

இத்தாலிய தொழில்நுட்பத்துடன் கூடிய
ELBA ஏ.சி. Air-Conditioner
5வருட உத்தரவாதத்தில்
வெறும் 27,445/= மட்டுமே







- Super Quiet Operation
- High Energy Efficient
- Auto Operation mode
- Auto Restaart Funtion
- Auto Swing Louvre
- Stylish Compact Design

விவரங்களுக்கு : பிறவுண் அன்ட் கம்பனி
பிறவுண்ஸ் காட்சியறை, இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2225150
உடனடி விசாரணைகளுக்கு: 0777 769773

SHARP Cornell Moulinex
ELBA Rico

(சி-35536)(32-12-டு)

உதயன்

# குதிரைக்கு முன்னால் கரட் தொங்கவிடும் முயற்சி!

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பான சமாதானப் பேச்சுக்கள் குறித்து 'புதுக் கதை' விட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க.

நேற்றுமுன்தினம் இரவு தம்மைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

"புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக் களை ஆரம்பிக்க அரசு தயார். அது குறித்துப் பேசி ஒரு முடிவு கண்டதும் அதை எழுத்தில் ஒப்பந்தமாக - உடன் பாடாக - ஏற்படுத்திக் கொள்ளலாம். அந்த ஏற்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு சிறிது காலம் செல்லும். அக்காலகட்டத்தில் இறுதித் தீர்வு குறித்தும் இரு தரப்பும் பேச்சுக்களை ஆரம்பிக் கலாம்" - என்று இப்போது தெரிவித்திருக்கிறார்.

'ஒப்பந்தம் செய்வோம். அந்த ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்த மூன்று முதல் ஆறு மாதங்கள் செல்ல லாம். அந்தக் காலத்திற்குள் இறுதித் தீர்வு குறித்துப் பேசவேண்டும்' என்ற சாரப்பட புது நிபந்தனை போடு கின்றார் ஜனாதிபதி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நடந்து வந்த இழுத்தடிப்புகள், ஏமாற்றுதல்கள் போன்றவற்றிலிருந்து தமிழர் தரப்பு இன்னும் சரியாகப் பாடம் படிக்கவில்லை என்றும் -

சிங்களத் தலைமை போடும் நாடகங்களுக்கு - வேடங்களுக்கு - எடுபட்டு ஏமாளியாகும் பழைய அரசியல் தலைமைத்துவம்தான் இப்போதும் தமிழர் தரப்பை வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது என்றும் -

பழைய நினைவுகளில் கனாக் காண்கின்றார் போலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஓர் ஒப்பந்தம் குறித்தும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு இறுதித் தீர்வுக்கான பேச்சுகளை அதனுடன் முடிச்சுப் போட்டும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் அப்படித்தான் எண்ணவைக்கின்றன.

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக இதற்கு முன்னர் பல ஒப்பந்தங்களைக் கண்டவர்கள் தமிழர்கள். அநத ஒப்பந்தங்கள் எல்லாம் என்னவாயின என்ற பட்டறிவு அவர்களுக்கு அளவுக்கு அதிகமாகவே உள்ளது. ஒப்பந்தம், இணக்கம், உடன்படிக்கை என்பன அவர் களுக்கு விடயங்களே அல்ல. ஒப்பந்தத்தில் இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதுதான் விவகாரம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபைகள் வரை நமது முன்னைய தலைவர்கள் பலர் இணங்கிய விவ காரங்கள் பலப்பல. ஆனால், இணக்கம் கண்ட விடயங் கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் யதார்த்தம்.

எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தும் இணக்கம் கண்டு, உடன்பாடு ஏற்படுத்தி, ஒப்பந்தம் செய்துவிட்டு, அதை நடைமுறைப்படுத்து வதற்கு முன்னர் இறுதித் தீர்வு குறித்துப் பேச்சை ஆரம பிக்கலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா வைக்கும் பொறி யில் சிக்குவதற்கு தமிழர்கள் இப்போதும் ஏமாளிகளல்லர்.

இது குதிரைவண்டிக்கு முன்னால் 'கரட்' கிழங்கைக கட்டித் தொங்க விட்டு விட்டு, அதை எட்டிப் பிடிக்க வென்று குதிரையைப் பாய்ந்தோட வைப்பது போன்ற முயற்சி. குதிரை வண்டி ஓட, ஓட கரட்டும் அதனுடன் சேர்ந்து முன்செல்ல, களைக்கும் வரை - கரட் ஆசை யில் - குதிரை ஓடுமாம்.

அதுபோல, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற பெயரில் இணக்கத்தை ஏற்படுத்திவிட்டு அந்த இணக்கத்தை நடைமுறைப்படுத்தாமலேயே அதைக் காட்டிக்காட்டி ஏமாற்றுப்போக்கைத் தொடரலாம் என்று மனக்கோட்டை கட்டுகின்றார் போலும் ஜனாதிபதி.

அடுத்தது, இந்தப்பேச்சுக்கள் தொடர்பாக சில ஆவ ணங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று அனுசரணை யாளர்களான நோர்வேத் தரப்பு வற்புறுத்துவதும் பேச்சு ஆரம்பிக்கத் தாமதம் அடைவதற்கு ஒரு காரணம் என்ற சாரப்பட தமிழ் எம்.பிக்களிடம் கருத்து வெளியிட் டிருக்கிறார் ஜனாதிபதி.

தமிழர் தரப்பிடம் மட்டுமல்ல பெரும்பான்மைச் சிங்களவர்கள் உட்பட முழு நாட்டு மக்களுக்கும் தாம் கொடுத்து வந்த வாக்குறுதிகளை நிறைவேற்று வதில் ஜனாதிபதி எவ்வளவு "முன்மாதிரியானவர்" - "சத்திய சீலர்" என்பதெல்லாம் நாட்டு மக்களுக்கு மட்டு மல்ல, அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள நோர்வேத் தரப்பு உட்பட சர்வதேசமுமே அறியும்.

எனவே, பேச்சை ஆரம்பிக்கமுன்னர் அனைத்தை யும் எழுத்தில் - ஆவணப்படுத்துவதில் - நோர்வேத்தரப்பு அளவுக்கு அதிகமாக சிரத்தை எடுப்பதில் வியப்பேதும் இல்லையே!

மக்கள் பாதுகாப்பு, சட்டம், சமாதான அமைச்சினால்

# எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 28 வரை நல்லொழுக்க சாரதி வாரம் பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

எதிர்வரும் 21ஆம் திகதியில் இருந்து 28ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு 'நல்லொழுக்க சாரதி வாரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை மக்கள் பாதுகாப்பு, சட்டம், சமாதானம, அலுவல்கள் தொடர்பான அமைச்சு விடுத்துள்ளது.

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத் துக்களைக் குறைக்கும் முகமாகவே நல்லொழுக்க சாரதிவாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளின தலைவர், செயலாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் உள்ளூராட்சிச் சபைகள் ஒவ்வொன்றும் கீழ்வ ரும் செயற்பாடுகளை மேற்கொண்டு விபத்துக்களைக் குறைக்கு மாறு மக்கள் பாதுகாப்பு சமாதானம் தொடர்பான அமைச்சுக் கேட்டுள்ளது.

★ மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஆகியன வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான விசேட நிகழ்ச் சித் திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.

★ வீதிகளில், பாதசாரிகளுக்காக நடமாடும் மேடைகளை அமைத்து அவற்றில் தடங்கல்கள் ஏற்படாத வண்ணம் நடவ டிக்கை எடுத்தல்.

★ வீதிகளிலும், பாதசாரிகள் நடமாடும் மேடைகளிலும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை ரத்துச்செய்தல்.

★ வீதிச் சமிக்ஞைகளைத் திருத்தி அமைத்தல்.

★ நெடுஞ்சாலைகளைத் திருத்தியமைத்தல்.

★ திட்டமிட்டபடி பயணிகளின் போக்குவரத்து மேடை களை அமைத்தல்.

★ மாகாண போக்குவரத்து அதிகாரியுடன் கலந்தாலோசித்துத் தடைகள் ஏற்படாதவண்ணம் நடமாடும் வியாபாரிகளைத் தடை செய்தல்.

★ பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் நிறுத்தும் பஸ் வண்டிகளுக்கு அவற்றின் நேரம் வரும் வரை நிறுத்தி வைப்ப தற்குப் பொலீஸ் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து விசேட இடம் ஒன்றை ஒதுக்கிக் கொடுத்தல்.

★ நெடுஞ்சாலைகளில் இருக்கும் மிகப்பெரிய மரங்களில் தேவையற்ற கிளைகளை வெட்டி அகற்றுதல்.

மேற்படி அறிவித்தலை மக்கள் பாதுகாப்பு, சட்டம், சமாதானம் அலுவல்கள் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ விடுத்துள்ளார். (10-185)

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளிலுள்ள

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை ஜூலை இறுதியில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

வடக்கு - கிழக்குமாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரி யர் வெற்றிடங்களுக்கு 1000 ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாத இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இப்பரீட்சையை நடத்து வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத் திருந்தனர்.

இதனையடுத்தே இப்போட்டிப் பரீட்சையை ஜூலை மாதத் தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப பதற்கான போட்டிப்பரீட்சைக்கு 30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள் ளனர். இவர்களில் யாழ்.மாவட்டத்திலிருந்து 6 ஆயிரம்பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சைகள் கொழும் பில் நடத்தப்படும் என பரீட்சைத் திணைக்களத்தால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இதனை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபித்ததை அடுத்து இப்போட்டிப் பரீட்சையை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-5)

# வலி.தெற்கு மற்றும் வலி. கிழக்கில் மோசமான 11 வீதிகள் புனரமைக்கப்படும்

## ஒரு கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்12

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத் தின் கீழ் வலி.தெற்கு மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சேதமடைந்த 11 வீதிகள் புனரமைக்கப்படவிருக் கின்றன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மிகவும் மோசமான நிலையில் உள்ள இந்த வீதிகளைப் புனரமைக்க ஒரு கோடியே 20லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கில் புத்தூர் குடியேற்றத்திட்ட வீதி, ஆவரங்கால் சந்தை வீதி, நிலாவரை எல்லாளன் வீதி, இருபாலை கருத்தோலை வீதி, இருபாலை விளையாட்டரங்கு வீதி ஆகியனவும் -

வலி.தெற்கில் தாவடி மயான வீதி, சுன்னாகம் தம்பாளை வீதி, ஏழாலை ஏழுகோயில் வீதி, மயிலணி முதலாம்குறுக்கு வதி, குமாரலிங்கம் வீதி, கிடுவங்கட்டை லேன் ஆகியனவும் - புன ரமைக்கப்படவிருக்கின்றன.

'நிகொட்' அமைப்பின் யாழ்.அலுவலகம் இத்திட்டத்தை முன்னெடுக்கவிருக்கின்றது. (8-3)

# கல்வி அபிவிருத்தி மாநாடு நாளை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான முக்கிய மாநாடு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலுள்ள தமிழீழக் கல்விக் கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டின் கல்வி அபிவிருத்தி, நிதிப் பயன்பாடு மற்றும் இவ்வருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட பல முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட வுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள 5 கல்வி வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற் றிற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக காளர்கள், நிர்வாக உத்தியோ கத்தர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி கள் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.(8-5)

**நாளை**

வைகாசி 31
ஞாயிற்றுக்கிழமை
(13.06.2004)
திதி: ஏகாதசி
முன்இரவு 7.37 வரை.
நட்சத்திரம்:அச்சுவினி
பின்னிரவு 12.26 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 8.53 - 10.23
ராகுகாலம்: 4.23 - 5.53
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

முன்கூட்டியே கணிப் பதும் கற்பனை செய் வதும் கவனத்துக்குப் பகை.

வலி. கிழக்குப் பகுதியிலுள்ள

# வசதி குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு இலவச கணனிப் பயிற்சிநெறி

வலி.கிழக்கு,ஜூன்12

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இளைஞர், யுவதிகளுக்கு மனிதவள அபிவிருத்திப் பயிற்சியின் கீழ் இலவச கணனிக் கற்கை நெறியினை நடத்து வதற்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

4 மாதங்களைக் கொண்டதாக அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் முதற்கட்டமாக 20பேர் உள்வாங்கப்படவுள்ளனர்.

பயிற்சி நெறி முடிவுற்றதும் பரீட்சை நடத்தி சான்றிதழ் களும் வழங்கப்படும் என கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் தெரிவித்துள்ளார். (8-180)

# நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 10.00மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற்று முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்குத் திருக் கல்யாணம் நடைபெற்றுத் திருவூஞ்சலும் இடம்பெறும். முருகப பெருமான் வீதியுலா வரும்போது ஆலய வீதிகளில் கற்பூர தீபங்கள் ஏற்றப்படும். (10)

# திருட்டுக்களைத் தடுப்பதற்கு சிவில் உடையில் பொலீஸார் கடமையில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.நகரப் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங் களைத் தடுப்பதற்கு விசேட பொலீஸார் சிவில் உடையுடன் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று யாழ்.பொலீஸ் நிலைய குற்றத தடுப்புப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர் விக்கிரமரத்ன தெரிவித்துள் ளார்.

இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் யாழ்.பஸ்நிலையப் பகுதிக்கு சிவில் உடையுடன் சைக்கிள்களில் சென்ற உமாகாந்தன், திஸாநாயக்கா, ரோகன் ஆகிய பொலீஸ் உத்தியோகத்தர்கள் தமது சைக்கிள்களை ஓரமாக நிறுத்திவிட்டு நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தனர் எனவும் அப்பொழுது பொலீ ஸார் நிறுத்திய சைக்கிள்களைத் திருட முயற்சி செய்த ஒருவரை அவர்கள் கைதுசெய்துள்ளனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே மேற்படி விசேட பொலீஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் இக்குழு தொடர்ந் தும் மக்களோடு மக்களாக சிவில் உடையுடன் கடமைக்குட்படுத்தப் படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (10-13)

# நூல் வரிசை



நூல் : **கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்**

ஆசிரியர் : **பாலசுப்பிரமணியம் தனபாலன்**

பதிப்பு : **கற்பக விநாயகர் அச்சகம்**

உலகின் சகல பாகங்களிலுமுள்ள ஆசிரியர்களும் கல்வி பயிற்றுநர்களும், கல்வித் திட்டமிடுவோரும், கல்வியின் சகல முனைகளிலும் புத்தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

புதிய அறிவு தொடர்ச்சியாகவரும் ஒன்று ஆகையால் முன்புபெற்ற அறிவின் கூறுகள் நிலையாக இருக்கமுடியாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படவேண்டும். விமர்சனரீதியான, தர்க்கரீதியான, ஆய்வுரீதியான, கல்வி எண்ணக் கருக்கள் விரிவாக்கப்படவேண்டும். தற்போதைய நடைமுறைக் கல்விச் சூழ்நிலைகளின் பிரச்சினைகளை இனங்காணவும், உண்மைகளைக் கண்டுபிடிக்கவும், ஆய்வுகளைச் செய்யவும் செயன்முறைப் பிரயோகம் சார்ந்த அறிவு - திறன்கள் தேவையாகவுள்ளன. இதனூடாகக் கற்பவர் மையக்கற்றல், கற்றல், தேர்ச்சி ஆர்வத்தை தூண்டுவதாகவும், பல்வேறு ஆக்கச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதாகவும் அமையும்.

ஆசிரியர்கள் இவ்வாறாகச் செயற்பட முதலில் அவர்கள் தம்மை வாண்மையுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும். புத்தாக்கங்களைத் தேடி அறிபவர்களாகவும், அவற்றை உருவாக்குபவர்களாகவும் இருக்கவேண்டும்.

இதற்குப் பா.தனபாலன் எழுதிய 'கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்' என்ற நூல் வழிகாட்டுகிறது. ஆசிரியர் கல்வி பற்றிய புதிய செயல்முறை எண்ணக்கருக்கள் இந்நூலில் அடக்கப்பட்டுள்ளன.

**- கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்.**

---



நூல் : **சின்னப் பாப்பா பாட்டு**

ஆசிரியர் : **ச.வே.பஞ்சாட்சரம்**

வெளியீடு : **கல்வி வள நிலையம், கிளிநொச்சி.**

இன்று உலக நிறுவனங்கள் சிறுவர் சமூகத்தின் பாதுகாப்புப் பற்றி, அவர்களின் உரிமைகள் பற்றி, அவற்றில் ஏற்பட்டுவரும் மீறல்கள் மனிதகுலத்தைப் பாதிப்பதான உண்மைநிலை பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் இலங்கையின் வடக்கு - கிழக்கு, மலையகப் பகுதிகளின் தமிழ்ச் சிறுவர்களின் நிலையைச் சற்று ஆழ்ந்துநோக்கும்போது அவர்களது பிரச்சினைகள் தனித்துவமானவையாகக் காணப்படுகின்றன.

கற்றல் உபகரணங்கள், கற்றலுக்கான உடல் உள ஆரோக்கியத்திற்கு வேண்டிய உணவு, உடை, பாதுகாப்பு, அரவணைப்பு என்பவை பெற்றோர்களிடமிருந்து போதியளவு கிடைக்கத் தடையாக, வறுமையும் பொருளீட்டல் பற்றிய முதன்மைச் சிரத்தையும் நிற்கின்றன. ஆசிரியர்களிடமிருந்து அரவணைப்பு - அங்கீகாரம் - வெற்றியனுபவங்களுடான தன்னம்பிக்கை விருத்தி - கல்வியூக்குவிப்பு என்பன கிடைப்பதற்குத் தடையாக ஆசிரியர்களுக்குப் புதிய கல்வித் திடடச் செயற்பாடுகள் ஏற்படுத்தும் வேலை நெருக்கீடு, மனஅழுத்தம் என்பன விளங்குகின்றன. சமூக இயந்திரம நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சுமுகமாக இயங்குவதற்கு, நல்ல குடிமக்களாக ஒத்தியங்கும் மனப்பாங்குகள்,- ஆற்றல்கள், மனஆரோக்கியம் என்பன சிறுவர்களுக்கு ஏற்படுத்தப்படவேண்டும். அந்தப் பொறுப்புணர்ந்தும் பெற்றோர்கள், போதிய அவகாசமின்மையால் அவர்களை நெறிப்படுத்தி வளர்க்கத் தவறிவருகிறார்கள். இதன் காரணமாகவே இன்றைய பதின் வயது (Teen age) தலைமுறையினர் சமூகத்தைக் குழப்பும் சக்தியாக மாறிவருகிறார்கள்.

இந்த நிலைமையை மாற்றியமைக்க ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நல்ல நடவடிக்கைகளுள் ஒன்றாகவே சிறுவர்க்கான "சின்னப்பாப்பா பாட்டு" பாடல் நூலும் வெளியிடப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

எந்தளவுக்குச் சிறுவர்களுக்கு நல்ல பண்புகளை, நல்ல ரசனைகளை, நல்ல உணர்ச்சிகளை, நல்ல நம்பிக்கைகளை ஊட்ட - வளர்க்க - உந்த முடியுமோ அந்தளவுக்கு அவற்றை நயம்படச் செய்வனவாக அமைந்துள்ள, 63 பாடல்களையும் பல வண்ணப் படங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது இச்சிறுவர் பாடல் நூல்.

இத்தொகுதிப் பாடல்கள் சிறுவர்களின் அறிவு அனுபவங்களுக்குட்பட்ட விடயங்கள் பற்றியே அமைந்துள்ளன. அவர்களுக்குப் பரீட்சயமான வழக்குச்சொற்களையே கொச்சை கலவாத சரியான வடிவங்களில் கையாண்டுள்ளார் நூலாசிரியர். அவர்களின் பிஞ்சு மனங்களில் கிளர்ச்சியை ஏற்படுத்தும் புதுமையான கண்ணோட்டங்களில் பொருள்கள் பாடப்பட்டிருப்பது குறிப்பிடப்படவேண்டிய சிறப்பம்சமாகும்.

பிள்ளைகளின் மனத்திரையில் சொற்களின் சரியான வடிவங்கள் அழுத்தமாக - நிரந்தரமாகப் பதிவாக உதவும் பயன் மிக்க உத்தி இதுவாகும்.

மேலும் பாடல்களோடு இடம்பெற்றுள்ள படங்கள், பாடல்விளக்கும் பொருள்களை உள்ளது உள்ளபடி காட்டும் - பிள்ளை புரிந்துகொள்ள உதவும் விளக்கப் படங்களாக அமைய வேண்டிய அவசியம் உணர்ந்து வரையப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இந்நூலின் அட்டைப்படம் இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்ட எந்தப் பாடல் சம்பந்தமானதுமன்று. இது இன்றைய தலைமுறைப் பிள்ளைகள் அட்டைப் படலத்திலுள்ள தமிழ்ப்பெரியார்கள் யார்யார் என்ற விவரங்களைத் தம் பெற்றோர் ஆசிரியர்களை வினாவியாவது அறிந்துகொள்ள வைக்கத் தூண்டும் உபயமாகவே இருக்கும். இது சிறுவர்களின் ஆராய்ச்சி மனப்பாங்கை வளர்க்கும் நன்முயற்சியாகும்.

இவ்வாறு தமிழ்ச் சமூகப் புனரமைப்பு முயற்சியில் இப்பாடற் தொகுதியும் நல்ல பங்களிப்பை வழங்கம் ஒரு படைப்பு என்பதில் ஐயமே இல்லை.

**-பா.பாலமுரளி.**

---



நூல் : **பவளமல்லி**

தொகுப்பு : **சி.மனோகரன்**

வெளியீடு : **தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், பிரான்ஸ்.**

இருபதாண்டுக் காலப் போரினால் சின்னாபின்னமாகித் தேடுவாரற்றுக் கிடந்த - கிடக்கின்ற - ஆலயங்கள், வித்தியாலயங்களுக்குத் திடீரென்று யோகம் அடிக்கத்தொடங்கி, அவை புத்துயிரும் புதிய எழிலும் பெற்றுத் துலங்க முற்படுங்காலம் இது. நிலையான சமாதானம் கிட்டுமோ என்ற ஐயத்தில் ஈழத்தமிழ் மக்கள் நெட்டுயிர்த்தாலும் போர் நிறுத்தம் அவர்களுக்குப் புத்துயிர்ப்பளிப்பதையும் மறுத்தல் இயலாது.

1910ஆம் ஆண்டு தெல்லிப்பழையிலே பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையால் தோற்றுவிக்கப்பட்டு, அவர் மைந்தர் ஜெயரத்தினத்தால் வெற்றிப்பாதையில் வழிநடத்தப்பட்டு, தெல்லிப்பழையார் மட்டுமன்றி அவர்களின் அயலூரவர்களும் தாம் தலைநிமிர்(ந்த) கழகமாக நன்றி பாராடடிப் பேணிப் பெருநிலைக்கு உயர்த்திய அறிவாலயமே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

இக்கல்லூரிப் பழையமாணவர், கல்லூரிக்கு அன்றும் இன்றும் ஆற்றிவரும் பணிகள் அளப்பில. இவற்றோடு நிற்காது கல்லூரியின் மைந்தர்களாய் விளங்கியவர்களதும். கல்லூரியின் நலன்விரும்பிகளதும் கட்டுரைகள், சிறுகதைகளைத் தொகுத்து, கல்லூரியின் பிரான்சு பழைய மாணவர் சங்கத்தினர் 'பவளமல்லி' என்ற பெயரில் நூலாய் வெளியிட்டுப் புதியதொரு பாதையையும் திறந்துள்ளனர். பழைய மாணவர்களைப் பொறுத்தவரை இந்நூல் ஒரு தொடக்கம் மட்டுமே. தொடர்ந்து மேலும் பல நூல்கள், பிரபலம்வாய்ந்த பழையமாணவர்களான எழுத்தாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளியாகவுள்ளன என்று அறியும்பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

கல்லூரியின் இந்நாள் அதிபர் பொ.சுந்தரலிங்கம் அவர்களின் அணிந்துரை, வெளியீட்டாளரின் தொகுப்புரை என்பன முதற்பகுதியாக அமைந்துள்ளன. தொடர்ந்து நூலின் முதறபகுதியில் பாவலர் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'பவளமல்லி'யின் தோரண வாயிலின் அலங்கார உறுப்பாக 'ஈழத்து இலக்கிய வரலாற்றில் பாவலர் துரையப்பாபிள்ளை' என்ற கட்டுரை பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கைவண்ணமாக ஒளிர்கின்றது. அடுத்து, பேராசிரியர் சபா.ஜெயராசாவின் 'பாவலர் துரையப்பாபிள்ளையின் சமுதாயப்பார்வை' சிற்பி சிவசரவணபவனின் 'ஈழத்திலே தேசிய சிந்தனையை வளர்த்த பாவலர்', டொமினிக் ஜீவாவின் 'பா பாடுவது மட்டும் பாவலரின் வேலையல்ல', பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் 'யாழ்ப்பாண வரலாறு பற்றிய சிறப்புவாய்ந்த பாவலரின் கட்டுரை', கலாநிதி செ.யோகராசாவின் 'பாவலரின் பாடல்கள்', ஆ.சிவநேசச்செல்வனின் 'பாவலர் துரையப்பாபிள்ளையும் ஈழத்தின் முதலாவது பெண் நாவலாசிரியர் மங்கள நாயகம் தம்பையாவும்', பேராசிரியர் நா.சண்முகலிங்கனின் 'மகாஜன இலக்கிய பாரம்பரியத்தின் முன்னோடி பாவலர்', திருச்செந்தூரனின் 'ஆங்கில வெண்பாப் பாடிய அருந்தமிழ்ப் புலவர்' ஆகிய ஒன்பது கட்டுரைகளும் பாவலரது பல்துறைப் பரிமாணங்களையும் பணிகளையும் விதந்து உரைக்கக் காண்கின்றோம். தொகுப்பாசிரியரும் அவரின் தொகுப்பு முயற்சிக்குக் கைகொடுத்தோரும் பாவலர்மீது கொண்டுள்ள பெருமதிப்பையும் நன்றியுணர்வையும் இக்கட்டுரைகளைப் பாவலர் மறைந்த பவள ஆண்டு நினைவாக 'பவளமல்லி' மலரில் வெளியிடுவதன் மூலம் புலப்படுத்தியுள்ளனர் எனலாம். இக்கட்டுரைப் பகுதிகள் முன்னரே வெளிவந்த பாவலர் பற்றிய நீண்ட கட்டுரைகளின் தேர்ந்த பகுதிகளாகும்.

இவற்றோடு நில்லாது "எங்கள் தாய்மொழி", "சாதி வழக்கம்" ஆகிய பாவலர் எழுதிய இரு கவிதைகள் பாவலர் தம் மொழிப்பற்றுக்கும் சமூகசிந்தனைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாய், அகச் சான்றுகளாய் விளங்குகின்றன.

மகாஜனக் கல்லூரியின் கல்விப்பாரம்பரியம், அப்பாரம்பரியத்தை உருவாக்கிய அதிபர்கள், ஆசிரியர்கள் அவர்களோடு மாணவர் கொண்டிருந்த அன்புறவு ஆகியவற்றைக் கோகிலா மகேந்திரனின் 'பொற்காலத்து மகாஜனவின் ஆசிரியர், மாணவர் தொடர்பு' என்ற கட்டுரை சுவைபட எடுத்துரைக்கின்றது.

கல்லூரியுடன் தொடர்புடைய மேற்குறித்த கட்டுரைகளோடு கல்விசார்ந்த பொதுக்கட்டுரைகளாகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கொ.கனகசபாபதியின் 'கல்வி எனும் மூலதனம் ஆங்காங்கு எப்படிச் செயற்படுகின்றது?, சைவப்புலவர் சு.செல்லத்துரையின் 'இன்றைய யாழ்ப்பாணச் சமூகநிலையும் கல்வியாளர் கடமையும்', செ.முருகபூபதியின் 'மேற்கு நாடுகளின் கல்வி முறையும் எமது நாட்டின் கல்வி முறையும் - ஒரு ஒப்பீடு, கவிஞர் வி.கந்தவனத்தின் 'பிரத்தியேகக் கல்விக் கூடங்களின் சார்பெதிர்வுகள், மயிலங்கூடலூர் பி.நடராசனின் 'பழைய மாணவர் சங்கங்கள் அவசியமா? தங்கராசா சிவபாலுவின் 'பிஞ்சு உள்ளத்தில் மெய்மை உளப்பாங்கு வளர்க்கப்படவேண்டும்', குரு அரவிந்தனின் 'புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழிக்கல்வி',சுமத்திரி பிரான்ஸ்ஸின் 'தமிழர் புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக் கல்வி', பி.இராஜகரனின் 'கல்வி என்பது என்ன?', தமிழரசனின் 'கல்வியின் பரப்புக்கள்' ஆகிய பதினொரு கட்டுரைகளும் கல்வியின் ஆழ, நீள, அகலப்பாடுகளைச் சிந்தனையைத் தூண்டும் வகையில் எடுத்தியம்புகின்றன.

கனடாவில் தமிழாட்சிபுரியும் தலைசிறந்த எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் 'புல்லறிவாளன்', க.வாசுதேவனின் 'கந்தன் மணியோசையில்' ஆகிய கட்டுரைகளும், கே.பாபுவின் 'போரின் பிரசவங்கள்', ஷோபா சக்தியின் 'விலங்குப் பண்ணை', ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'காங்கிறீற்', பத்மா சோமகாந்தனின் 'புதைகுழி', சிவக்கொழுந்து பரமானந்தனின் 'தேவதைகளின் தேவைகள்', எஸ்.இராமேஸ்வரனின் 'வாழ்வதற்காகச் சாவதா?', அ.இரவியின் 'குதிரை முடக்கு' ஆகிய சிறுகதைகளும் இலக்கியச் சுவையை வாசகருக்கு வழங்குவதோடு, சமகாலத்தில் எமது வாழ்க்கையையும், கடந்தகால நினைவுகளையும், எதிர்பார்ப்புக்களையும் யதார்த்த பூர்வமாகச் சித்திரிக்கவும் தவறவில்லை.

**பவளமல்லி** வடிவால் சிறுத்தும், வனப்பால் சிறந்தும், மணத்தால் கவர்ந்தும் விடும் ஒரு வகை மலர், 'பவளமல்லி' நூலும் இந்த மூவகைப் பண்புகளும் வாய்க்கப்பெற்றுத் தனது பெயருக்கு மிகப்பொருத்தமாக விளங்குகின்றது என்று தயங்காது கூறலாம். **- சொக்கன்.**

---

# பன்முக ஆளுமை கொண்ட அறிஞர் வணபிதா அ.அ.போல்

விஞ்ஞானம், கலை ஆகிய இரு துறைகளிலும் இரட்டைப் பட்டதாரியாக, இரட்டை முதுமாணிப் பட்டம் பெற்றவராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, பிரதம இரசாயனவியலாளராக, கல்லூரி அதிபராக, மதகுருவாக, பத்திரிகை ஆசிரியராக என்று பன்முக பரிமாணம் கொண்ட செயல் வீரனாக செயற்கரிய செய்த யாழ்ப்பாணத்து மண்ணின் பெரும் இரசாயனவியல் அறிஞராக திகழ்ந்தவர்கள் தான் வண.பிதா அந்தோனி அரியரட்ணம் போல் அடிகளார் எனபதை மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் சிறப்பு விஞ்ஞான மாணி பட்டத்தையும் (B.Sc. Special Chemistry), கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் முதுதத்துவமாணி பட்டத்தையும் (M.Phil. in Chemistry), பட்டய இரசாயனவியலாளர் பட்டத்தையும் (C.Chem.), இலங்கைப் பட்டய இரசாயன அறிஞர்க்கான உறுப்புரிமைப் பட்டத்தையும், (M.I.Chem.C), செரம்பூர் பல்கலைக்கழக இறையியல் மாணிப் பட்டத்தையும் (B.D.), யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (Dip.in.Edu.) பட்டத்தையும் அமெரிக்க பிறின்ஸ்டன் பல்கலைக்கழக இறையியல் முதுமாணி (Th.M.) பட்டத்தையும், பெற்ற சிறப்புமிகு அறிஞராக விளங்கியதோடு, தனது இறுதிக் காலத்திலும் கூட கல்விமீது அளவிலாத பற்றுக்கொண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற

## நீத்தார் நயப்புரை

கொண்டு சீரிய சிந்தனையாளராகத் திகழ்ந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இராசாயனவியற்றுறை விரிவுரையாளர், புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலையில் பிரதம இரசாயனவியலாளர் (Chief Chemist) ஆகிய உயர் பதவிகளை வகித்த வணபிதா.அ.அ.போல் அடிகளார், தன் மண்மீதும் தான் கல்வி கற்ற பாடசாலைமீதும் அதீதபற்றுக் கொண்டு இவ்வுயர்பதவிகளை விட்டு யாழ்ப்பாணக் கல்லூரி இரசாயனவியல் ஆசிரியராகவும், தென்னிந்திய திருச்சபை சமய குருவாகவும் பணியாற்றி பின்னர் உதயதாரகை (Morning Ster) என்னும் பத்திரிகையின் ஆங்கிலப்பிரிவு ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி சஞ்சிகை (Miscellany) ஆசிரியர், ஆசிரியர் கழகத் தலைவர், செயலாளர், பொருளாளர், யாழ்ப்பாணக் கல்லூரி மதகுரு (Chaplain), தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீன செயலாளர், கிறிஸ்தவ சமூக ஆய்வுநிறுவன தலைவர், யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் தென்னிந்தியத் திருச்சபை பேராயர், அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகள் அவர்களால் வணபிதா அ.அ. போல் அடிகள் 22.02.2000அன்று யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டார். 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற மிகப் பெரிய இடப்பெயர்வின்போதும் கல்லூரி மீது பற்றுக்கொண்டு வண. அ.அ.போல் அடிகளார் வட்டுக்கோட்டையிலே தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

25.01.1947 இல் பிறந்த இப்பெரியார் தனது ஆரம்பக்கல்வியை புன்னாலைக்கட்டுவனிலும் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்று யாழ்ப்பாணக கல்லூரியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழக அனுமதிபெற்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தர உயிரியல் விஞ்ஞான மாணவனாக நான் இருந்தபோது இரசாயனவியல அறிஞர் வணபிதா அ.அ.போல் அடிகள் இரசாயனவியல் கற்பித்த முதல்தொகுதி மாணவர்களில் (First Batch) ஒருவனாகக் கற்கும் வாய்ப்பைப் பெற்றதை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். எமக்கு அப்போது இரசாயனவியல் பாடம் கடினமான பாடமாக இருந்தது. அப்



பொழுது இரசாயன மேதையான வணபிதா அ.அ.போல் அடிகளார் தனது ஓய்வுநேரங்களில் கூட எமக்கு இரசாயனவியல் வினாவிடை வகுப்புகளை எடுத்தது இன்றும் எம் கண முன்நிற்கிறது. மேலும் நாங்கள் கல்விகற்ற காலங்களில் ஆசிரியர் அவர்கள் தனது இறையியல்மாணி பட்டப் பரீட்சையை எடுக்கும்போது யாழ்ப்பாணக் கல்லூரி, செரம்பூர் இறையியல்மாணிப் பட்டப் பரீட்சைக்கு பரீட்சை நிலையமாக இருந்தது. அப்பொழுது பரீட்சை தொடங்குவதற்கு முதல் உள்ள பாடவேளை கூட எமக்கு இரசாயனவியலை கற்பித்து விட்டு இறையியல் பட்டப் பரீட்சையை எழுதி சித்திபெற்றார். இத்தகைய உயரிய செயற்பாடுகள் அவரது ஆழ்ந்தகன்ற அறிவுப் புலமையையும், மாணவர் மீதுகொணட பேரன்பையும் புலப்படுத்துவதாக அமைகினறது.

- தெல்லியூர்
டாக்டர் **வெற்றிவேல் சக்திவேல்.**

---

## பேரணி தொடர்பான கலந்துரையாடல்

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் வியாழன் நடைபெறவுள்ள கண்டனப் பேரணி தொடர்பாக இன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் நல்லூர்க் கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை தவறாது சமுகமளிக்குமாறு பேரணி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.(10-ரி)

## கணனிப் பரீட்சை

வலி.தெற்கு,ஜூன்12

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்று வந்த கணனிப் பயிற்சிநெறியில் பயின்றவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி. தெற்கு பிரதேசசெயலக பிரிவில் வாழும் - வறுமைக் கோட்டின்கீழ் வாழும் - 20 இளைஞர், யுவதிகளுக்கு மேற்படி பிரதேச செயலகத்தில் கணனிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கே கணனி தொடர்பான பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-152)

# தேர்தல் பணிக்காக ஊழியரைத் தெரிவதில் திருகு தாளங்கள்...

**7** நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

**தே**ர்தல் பணிக்கு ஊழியர்களை நியமிப்பது தொடர்பாக இம்முறை தேர்தல் ஆணையகம் கடுமையான விதிகளைப் பிறப்பித்திருந்தது. அதன்படி தேர்தல் பணிக்கு 50 சதவீத மாநில அரச ஊழியர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பிரச்சினை இங்குதான் உருவாகிறது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அரச ஊழியர்கள் போராட்டத்தில் சுமார் 12 லட்சம் பேர் பங்குபற்றினர். அவர்கள் ஜெயலலிதா அரசினால் பழிவாங்கப்பட்டனர். தேர்தல் பிரசார நடவடிககைகளில் அரச ஊழியர்கள் அரசுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்ததைத் தமிழக அரசு அறிந்திருந்தது.

எனவே, அதே மாநில அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளிலும் பங்குபற்றினால் தேர்தலின்போது தாங்கள் மேற்கொள்ளவுள்ள திட்டங்களை நிறைவேற்ற அந்த அரச ஊழியர்கள் ஒத்துழைக்கமாட்டார்கள் என்பதால் மாநில அரச ஊழியர்களுக்குப் பதிலாக தனியார் பள்ளி ஆசிரியர்களை குறிப்பாகப் பெண் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாநில அரச ஊழியர்களில் ஒரு தொகுதியினர் மட்டும் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டனர். இந்த ஊழியர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற அரச ஊழியர்களின் போராட்டம் தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் பாதிகக்பபடாதவர்கள்.

தேர்தல் பணிகளில் பங்கேற்க விருப்பமா எனக்கேட்டு விருப்பம் தெரிவிக்கும் அரச ஊழியர்களே கடந்த காலங்களில் தேர்தல் பணிகளுக்கு நியமிக்கப்பட்டனர். ஆனால், இம்முறை ஊழியா்கள் வலுக்கட்டாயமாகத் தேர்தல் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச ஊழியர்கள் குறைவாகவுள்ள மாநிலத்தில் இந்த விதியைப் பின்பற்றலாம். ஆனால், 12 லட்சம் அரச ஊழியர்கள் பணியாற்றும் தமிழ்நாட்டில் ஏன் தனியார் பள்ளி ஆசிரியர்களைத் தேர்தல் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும் என அரச ஊழியர்கள் சங்கத்தினர் குறைகூறினர்.

இருப்பினும், பெரும்பாலான அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் பங்குபற்ற விரும்


சுப்பிரமணியசுவாமி

பவில்லை. இதற்குப் புதுமையான காரணம் ஒன்று இருந்தது. அதாவது தங்களைப் பழிவாங்கிய அரசுக்கு எதிராக தங்கள் குடும்பத்தினருடன் சென்று சிந்தாமல் சிதறாமல் வாக்களிப்பதையே அவர்கள் பெரிதும் விரும்பினர். தங்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமைக்கு அவர்கள் அரசுக்கு நன்றிகூறினர்.

தேர்தல் கடமைகளுக்காக ஊழியர்களை நியமிப்பது தமிழ்நாடு அரசின் பொறுப்பல்ல. ஆனால், தமிழ்நாடு அரசு விரும்பும் விதத்தில் ஊழியர் நியமனங்களை மேற்கொள்ள மாநில தேர்தல் ஆணையகத்தில் அதிகாரிகள் தயாராயிருந்தனர்.

தேர்தல் ஆணையகத்தின் விதிகள் எவ்வளவு கடுமையானவையாக இருந்தபோதிலும், அதற்குள்ளும் சுழியோடும் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர்களாகவோ அல்லது அரச ஊழியர்களாகவோ அல்லாதவர்களை தேர்தல் அதிகாரிகளாக நியமிக்க தமிழக அரசு திட்டமிட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

அடையாள அட்டை வழங்கும் அதிகாரிகளுக்கு லஞ்சம்வழங்கி அரச ஊழியர் என்ற பெயரில் அடையாள அட்டைகள் பெறப்பட்டனவாம். உதாரணமாக நங்க நல்லூர் பகுதி அ.தி.மு.க. செயலாளரின் சகோதரர் அரச ஊழியரோ ஆசிரியரோ அல்ல. ஆனால், அவர் சேப்பாக்கத்திலுள்ள வாக்குச் சாவடிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அவரது மற்றொரு சகோதரா தென்சென்னைப் பகுதியிலுள்ள மற்றொரு வாக்குச் சாவடிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். (பின்னர் இவை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்


கலெக்டர் சித்திக்

கப்பட்டது)

என்னதான் கண்கொத்திப் பாம்பாகச் செயற்பட்டாலும் உள்ளூர் மட்டத்தில் அதுவும் இறுதி நேரத்தில் இவ்வித ஊழல்களைக் கண்டுபிடிப்பதோ உரிய நடவடிக்கை எடுப்பதோ கடினம்.

தேர்தல் ஆணையகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அவர்களுக்குத் தினமும் தலையிடியைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. குறிப்பாகத் தேர்தல் ஆணையகத்திற்கு பதில்கூற வேண்டிய பல உயரதிகாரிகள் தேர்தல் விதிமுறைகளை மீறி நடந்துள்ளனர். பெரும்பாலான பொலீஸ் அதிகாரிகள் ஆளும் கட்சிக்குச் சார்பாகச் செயற்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த அதிகாரிகளில் சிலர் தேர்தல் ஆணையகத்தால் தண்டனைகளையும் பெற்றுள்ளனர்.

தேர்தல் ஏற்பாடுகள் எவ்வாறு கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டாலும் தேர்தல் தினத்தன்று ஆளும்கட்சி ஏதாவது தில்லுமுல்லுகளை மேற்கொள்ளும் என்ற அச்சம் தி.மு.க. கூட்டணியினருக்கு இருந்தது. எனவே, வாக்களிப்பு நடைபெறும்போது அனைத்துத் தொகுதிகளிலும் வாக்களிப்பை வீடியோப் படமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை தி.மு.க.கூட்டணி முன்வைத்தது.

அனைத்துத் தொகுதிகளும் வாக்குப் பதிவை வீடியோ எடுப்பது கடினம் எனவும் பதற்றம் நிறைந்த தொகுதிகளில் மாத்திரம் வீடியோ எடுப்பது எனவும் தேர்தல் ஆணையகம் உடன்பட்டது. இவற்றில் வடசென்னை, தென்சென்னை, மத்தியசென்னை ஆகிய மூன்று தொகுதிகளும் அடங்கும். தென்சென்னைத் தொகுதியில் வீடியோ எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே ஆளும்கட்சியின் அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறல இடம்பெற்றது. அதுகுறித்துப் பின்னர் பார்ப்போம்.

### உயரதிகாரிகளின் தலைகள் உருண்டன

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆளும்கட்சியாலும் அவர்களது அடிவருடிகளான உயரதிகாரிகளாலும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் ஆணையகம் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தது. அதன் பயனாக பல உயரதிகாரிகளின் தலைகள் உருண்டன.

அதிரடிப் பொலீஸ் அதிகாரி எனப் பெயரெடுத்த பிரேம்குமார் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தனது சொந்த ஊரில் தன்னின மக்கள் மத்தியில் திருநெல்வேலித் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் அமிர்த கணேசனுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடடதாகத் தெரியவந்தது.

இதுதொடர்பான தகவல்களை திருநெல்வேலி மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் திரட்டினர். அத்துடன், டில்லியிலிருக்கும் தலைமைத் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தனர். உடனடியாக விசாரணைகளை நடத்திய தேர்தல் ஆணையகம் அந்த முறைப்பாட்டில் உண்மையிருக்கவே பிரேம்குமாரை பணியிலிருந்து இடைநிறுத்தியது.

இதுகுறித்த புகாரை தேர்தல் ஆணையகத்திற்கு அனுப்பிவைத்த கம்யூனிஸ்ட் பிரமுகர் கருத்துத் தெரிவிக்கையில்:-

"ஆளும்கட்சியினரை தங்களுடைய எஜமான்களாக நினைக்கும் குணம் இன்றும் பல அரச உயரதிகாரிகளிடம் இருக்கிறது. சிலர் பயம் காரணமாகவும் இப்படி நடந்துகொள்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் தவறு தவறுதான். அதிகாரிகள் மக்களுக்குத் தான் பயந்துசெயற்படவேண்டும். மக்கள்தான் என்றைக்கும் எஜமானர்கள்" எனத தெரிவித்தார்.

அ.தி.மு.கவினரின் தேர்தல் விதிமுறை மீறல்களைத் தடுக்கவில்லை என மதுரை பொலீஸ் ஆணையாளர் விஜயகுமார் மீது முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. அதை உடனடியாக விசாரித்த தேர்தல் ஆணையகம் அவரை உடனடியாக இடமாற்றம் செய்தது.

மதுரைத் தொகுதியில் போட்டியிட்ட சுப்பிரமணியசுவாமி தான் தேர்தலில் வெல்லப் போவதில்லை என்பதை நேரகாலத்துடன் அறிந்து வைத்திருந்தாலும் அந்தத் தொகுதியில் ஒரு பயனான நடவடிக்கையை மேற்கொண்டார். ஆளும கட்சியினரின் தேர்தல் விதிமுறை மீறல்களை உடனுக்குடன் உரிய உரிய இடத்திற்குத் தெரிவித்துவந்தார்.

அவைகுறித்து தேர்தல் ஆணையகம் உடனுக்குடன் நடவடிக்கையும் எடுத்தது.

முதல்வர் ஜெயலலிதா பாண்டிச்சேரியில் பா.ஜ.கட்சி வேட்பாளர் லலிதா குமாரமங்கலத்தை ஆதரித்துப் பேச, அங்கு சென்றபோது பாண்டிச்சேரி அ.தி.மு.க. அமைப்பாளர் தேர்தல் விதிமுறைகளை மீறி பெருமெடுப்பில் ஜெயலலிதாவுக்கு வரவேற்பளிக்க முற்பட்டதும் அதிகாரிகள் அந்த அலங்காரங்களை அகற்றியதும் தெரிந்ததே. ஆனால், ஜெயலலிதாவின் விஜயத்திற்கு சற்றுநேரத்திற்கு முன்னர் மீண்டும் அந்த அலங்காரங்கள் அமைக்கப்பட்டன. இந்தச் சம்பவம் பாண்டிச்சேரியில் அ.தி.மு.க.கட்சியின் அரசியல் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையகம் ரத்துச் செய்யும் அளவிற்குச் சென்றுள்ளது.

தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையகம் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கைகளுக்கு பலியானோர் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவர்களது எடுபிடிகளுமே.

தமிழகத்தைச் சேர்ந்த அரச உயரதிகாரிகள் அரசுக்குச் சாதகமாக நடந்து தேர்தல் ஆணையகத்திடம் மாட்டிக்கொண்டதால் ஆளும்கட்சிக்கு ஆதரவு குறையத் தொடங்கியது. இது இவ்வாறு இருக்க உயர் அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்ட சம்பவங்களும் இல்லாமலில்லை. அவையும் ஆளுங்கட்சிக்குப் பாதிப்பையே ஏற்படுத்தின.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் விவசாயிகளின் நீர்இறைக்கும் இயந்திரங்களுக்கான மின் கட்டணத்தை செலுத்தவேண்டும் என உத்தரவு போட்டார்.

பல விவசாயிகளிடம் இந்தக் கட்டணத்தைச் செலுத்த பணம் இல்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து விவசாயிகளின் இந்த மின்கட்டணத்தை அரசே கொடுக்கிற மாதிரி அ.தி.மு.க. ஒரு திட்டம் தயாரித்தது. குறித்த மின்கட்டணத்தை அரசாங்கம் மணிஓடர் மூலம விவசாயிகளுக்கு அனுப்பிவைக்கும் விவசாயிகள் அந்த மணி ஓடரை மாற்றிக் காசாக்கி மின்சார வாரியத்தில் அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதே அந்தத் திட்டமாகும்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அரசு மின்கட்டணத்தை மணிஓடர் மூலம் விவசாயிகளுக்கு அனுப்புவது தேர்தல் விதிகளுக்குஅமைவானதா என வினவி தர்மபுரி மாவட்டச் செயலாளர் (கலெக்டர்) சித்திக் தலைமைத் தேர்தல்


அன்பழகன்

ஆணையாளருக்கு கடிதம் எழுதியிருந்தார். தேர்தல் முடியும்வரை தர்மபுரி மாவட்டத்தில் மாத்திரமன்றி தமிழகம் எங்குமே இந்த மணிஓடர் விளையாட்டை உடன்நிறுத்துமாறு தேர்தல் ஆணையகம் உத்தரவு பிறப்பித்தது. இது அ.தி.மு.க. வினரது திட்டத்திற்குப் பலத்த அடியாக அமைந்தது. விவசாயிகளின் ஆதரவை ஓரளவேனும் பெறலாம் என எண்ணியிருந்த ஜெயலலிதாவின் மனக்கோட்டை தவிடுபொடியானது.

இந்த விடயம் குறித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரிடம் ஏன் ஆலோசனை கேட்கவில்லை? தேர்தல் ஆணையகத்திற்கு நேரடியாக ஏன் கடிதமெழுதினீர்கள் என சித்திக்கிடம் பத்திரிகை நிருபர் ஒருவர் வினவிய போது 'தேர்தல் விதிகளின்படிதான் நான் செயற்பட்டேன்' எனத் தெரிவித்துள்ளார்.

ஆனானப்பட்ட அமைச்சர்களே ஜெயலலிதாவுக்கு முன்னால் நிலத்தில் குப்புற விழுந்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்போது அரச அதிகாரியான சித்திக் எம்மாத்திரம் என மக்கள் பேசிக் கொண்டனர். தேர்தல் முடிவடைந்த கையோடு பல அரச அதிகாரிகளின் தலைகள் உருளவுள்ளன. அதில் சித்திக் முதலிடத்தைப் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

அரசு மீது அரச ஊழியர்கள் கொண்டிருந்த வெறுப்பை ஓரளவது போக்கும் நோக்கில் முதலமைச்சர் பிரசாரக் கூட்டங்களில் பேசி வந்தார்.


பிரேம்குமார்

தேர்தல் முடிவடைந்த பின்னர் அரச ஊழியர்கள் மீது அரசு கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்க்கட்சிகள் வதந்திகளைப் பரப்புகின்றன. அவற்றை நம்பாதீர்கள் என ஜெயலலிதா கூட்டங்களில் தெரிவித்தார்.

இதற்கிடையில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை அரசு குறைக்கவுள்ளது எனவும் ஓய்வூதியர்களுக்கு 70வயதிற்குப் பின்னர் ஓய்வூதியம் நிறுத்தப்படவுள்ளது எனவும் வதந்திகள் பரவ ஆரம்பித்தன.

இந்தத் தகவல்கள் நிதி அமைச்சர் பொன்னையன் மூலம் ஜெயலலிதாவுக்குக் கிடைத்தன. தானே தெளிவுபடுத்தி அறிக்கை விடுவதாக தெரிவித்த முதல்வர் அறிக்கையையும் வெளியிட்டார்.

முதல்வர் வெளியிட்ட அறிக்கை தேன் கூட்டில் கையை வைத்தது மாதிரி எதிர்விளைவுகளை உருவாக்கியது. "அரசு இதுவரை எடுத்த நடவடிககைகள் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. அதைப் புரிந்து கொள்ளாமல் எதிர்ககட்சிகளின் தூண்டுதல்களுக்கு இரையாகி அரச ஊழியர்கள் போராட்டம் நடததினர்" என்ற விதமாக ஜெயலலிதாவின் அறிக்கை அமைந்தது. நீறு பூத்த நெருப்பாக இருந்த அரச ஊழியர்கள் நெஞ்சங்கள் மீண்டும் கொதிப்படைந்தன.

(வளரும்)

# அறிவித்தல்

## மீதிகளை உறுதிசெய்யுங்கள்

தமிழா புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில்முயற்சி நிதியூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 1990 இலிருந்து 1996 வரையான காலப்பகுதியில் சேமிப்புச் செய்தவர்களும் கடன் பெற்றவர்களும் தங்களது மீதிகளை 14.06.2004 இலிருந்து 19.06.2004 வரையான காலப்பகுதியில் அவ்வப்பகுதியில் இருக்கின்ற தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகங்களில் உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மீதிகளை உறுதிப்படுத்தச் செல்லும்போது தங்களுக்கு வழங்கப் பெற்றிருந்த சேமிப்புக் கையேடு, சான்றிதழ் போன்ற ஆவணங்களைக் கொண்டு செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழக தொடர்புச் செயலகங்கள்:**

| | |
|---|---|
| யாழ். மாவட்டம் | 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில். |
| கிளிநொச்சி மாவட்டம் | வலயக் கல்விப் பணிமனை முன்பாக, கிளிநொச்சி. |
| வவுனியா மாவட்டம் | 1. வைரவப் புளியங்குளம், வவுனியா. 2. நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், கனகராயன்குளம். |
| மன்னார் மாவட்டம் | 1. இல. 09, பிரதான வீதி, மன்னார். 2. உபசெயலகம், அடம்பன். |
| முல்லைத்தீவு மாவட்டம் | கைவேலி, பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு. |

சுயசார்பு தொழில்முயற்சி நிதியம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம். (சி-35520)(34-13-19-21)

## "பிரபல இந்திய அழகுக்கலை நிபுணர் திருமதி பிரபா ரெட்டியின் மாணவி நடத்தும் கலந்துரையாடல்"



மேற்படி இக்கலந்துரையாடலானது ஏற்கனவே திருமதி **பிரபா ரெட்டியிடம்** பயிற்சிபெற்று சான்றிதழ்பெற்ற மாணவர்களுக்கும் அழகுக்கலை பற்றி அறிந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவர்களுக்குமாக நடைபெற இருக்கிறது.

**இடம்:** நாவலர் கலாசார மண்டபம்
**காலம்:** நாளை (13.06.2004) ஞாயிறு
**நேரம்:** காலை 9.00 மணி

**ஆர்வமுள்ள அனைவரும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம்.**

**அனுமதி இலவசம்**

T.P:077-6209963
T:P:024 4589464
T.P:071 2346781

- நிர்வாகம்.

(சி35514)(37-13-19-21)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிலே 13 - 12 - 1932



விண்ணிலே 12 - 06 - 1994

**செல்வி சறோஜினிதேவி தில்லையம்பலம்**

(இளைப்பாறிய ஆசிரியை, கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்)

அன்பும் பாசமும் ஊட்டி 'வளர்த்தீர்கள் அன்ரி அம்மா!
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்தீர்கள் அன்ரி அம்மா!
உற்ற துணையாய் உடனிருந்து வளர்த்தீர்கள் அன்ரி அம்மா!
ஆண்டுகள் பத்து ஆனாலும் உம்மை மறவோம்.

வி.அரவிந்தன், வி.அகிலன்
(பெறாமக்கள்).

*103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(32944) (21-19-13)

## சீருடைத்துணி விநியோகம்

குருநகர்,ஜூன்12

குருநகர், றெக்கிளமேசன் கிழக்கு (ஜே/68) கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குருநகர் ஐந்துமாடியில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என இப் பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் அ.யூலன் தெரிவித்துள்ளார். (10-51)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

குடாநாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள கண்டனப் பேரணி பற்றிய கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்குச் சுன்னாகம் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவை உடுவில்' பிரதேச ஊரகக் கிளையின் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் செ.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (10-ரி)

## முன்பள்ளிக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்12

தெல்லிப்பழைப் பிரதேச முன்பள்ளி மழலைகளின் கண்காட்சியொன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

செல்லத்துரை நம்பியாரூர் தலைமையில் இடம்பெறவிருக்கும் மேற்படி கண்காட்சியில் வலி.வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் செ.செல்வரததினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (10-ரி)

## பொத்துவில் மீன்வாடிகள் தீயில்!

கொழும்பு,ஜூன்12

பொத்துவில் மீன்பிடிக் கிராமத்தில ஏற்பட்ட தீ விபத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட மீன்வாடிகள் தீயில் எரிந்து சேதமாகியுள்ளன.

இந்தத் தீ விபத்து கடந்த புதன் கிழமை அதிகாலை 4.30 மணியளவில இடம்பெற்றுள்ளது.

அதிகாலையில் பெரிய வெடிச் சத்தம் இப்பகுதியில் கேட்டதாகவும், அதன் பின்னரே மீன்வாடிகளில் தீ பற்றிக் கொண்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தில் உயிர்ச்சேதம ஏதும் ஏற்படவில்லை. சுமார் இருபது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள மீன்பிடி உபகரணங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன என்னப் பொத்துவில் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## ஓய்வூதியர் சங்கக் கூட்டம்

குருநகர்,ஜூன்12

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் கு.குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (10-51)

## நூல் வெளியீடு

திருகோணமலை,ஜூன்12

ஏ.ஆர்.அருட்பிரகாசம் எழுதிய 'பணச்சுரண்டல்' ஆங்கில நூலின் சர்வதேச வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்குத் திருகோணமலை நகரசபை மண்டபத்தில், நடைபெறவுள்ளது. (10-ரி)


உங்களுக்காகப் புதிய மெருகுடன்!

**உங்கள் உணவகம்**

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின

விஷேட தயாரிப்பு - சிக்கன் M.DOT புரியாணி வழமையான உணவுப் பொதிகள வழமைபோல முற்பகல் 11 மணி-பிற்பகல் 3 மணிவரை.

மனைக்கு வெளியே ஒரு மனை

ஜெசித்தாரா

மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை.
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(C-35504) T.P.222 7227 (43-21-13-19)


## யாழ். குடாநாட்டில்

## நவீன முறையிலான அழகுக்கலை பயிற்சிகளும், வகுப்புகளும் ஆரம்பம்

கொழும்பு விவேகானந்தா ஆசிரியையும், கொழும்பில் அழகுக்கலை வகுப்புகள் நடத்துபவரும், கொழும்பில் இயங்கிக் கொண்டிருக்கும் **"Moon Beauty Care"** உரிமையாளருமான திருமதி B.**அகிலா** அவர்களால் நடத்தப்படும். மூன்றுமாத காலப் பயிற்சியின் முடிவில் **Diploma** சான்றிதழ்கள வழங்கப்படும். **Diploma Course**இல் உள்ளடங்குபவை.

1) **Facial:-** Gold Herbal, 22K Gold (Galvanic), Aroma Facial, Aroma Oil Treatment, Vegetable, Fruits, Herbal, Mini, Bleaching.

2) **Face Care:-** Pigmentation (Herbal), Pimple Treat ment (Herbal), Threading & Waxing (2 methods), Pimple Face Facial.

3) **Hair Care:-** Hair Wash, Seat Massage, Hair Styles - 30 methods, Henna Treatment, Hair Cutting, Blow Drying, Hair Coloring, Hair Dying, Hair straightening, Hair Pirming & Curling Dandruff Treatment (Herbal), Dull Hair Treatment, கூந்தல் வளர் தைலம் தயாரிக்கும் முறை.

4) **Eye Care:-** Eye massage , Under Eye Treatment, Eye Brow Shaping.

5) **Body Care:-** Manil Cure, Pedi Cure

6) **Bridle Dressing & Make Up:-**
* **Hindu**
(பலவிதமான சிகை அலங்காரமும், நாகஜடையும்)
* **Singalese** * **Christian**
* **Kujarath**

7) **Make up:-** Oil Makeup, Normal, Stick, Dance, Film.

8) **Mehanthy:-** Areablen, Cultural, Different Coloring, Body Art & Stone work, Nail Art நாகஜடை செய்தல், Bouquets Settings, கொண்டை மாலை ராக்கொடி மாலை Hair Spray செய்தல்.

### Advance Course

1) **Infra Red Lamp:-** கண் கருவளையத்தினை நிரந்தரமாக நீக்குதல்.
2) **Gly Colic:-** முகத்திற் காணப்படும் வெட்டுக்காயங்கள் மாறா வடுக்கள் நீக்கும் சிகிச்சை.
3) **Warts Remove:-** பாலுண்ணிகள், காய்கள் அகற்றுதல்.
4). **Spot Treatment:-** கரும்புள்ளிகளை அகற்றுதல்
5) **Pimple Treatment:-** High Frequency
6) **Danruff Treatment:-** High Frequency
7) **Pebonding:-** நிரந்தரமாக முடியை நீட்டுவது.
8) **Gold Facial**, **Silvar Facial**, **Whiting Facial** } Galvanic & High Frequency
9) **Pigmentation:-** முகத்திற் படர்ந்திருக்கும் கருமையை அகற்றுதல்.
10) **Open Pores:-** முகத்திற் காணப்படும் துவாரங்களை நீக்குதல்.

**Course** சம்பந்தமான மேலதிக தகவல்களையும் பதிவுகளையும் மேற்கொள்ள விரும்புவோர் பின்வரும் இடங்களில் தொடர்புகொள்ளவும்.

**எடிசன் அக்கடமி**
K.K.S. வீதி.
யாழ்ப்பாணம்.

**க.தபோதினி**
145, சந்நிதி றோட்,
அச்சுவேலி
(லக்ஸி கொமினிக் கேசன்முன்பாக)

**ஏசியன் கல்விநிலையம்**
புத்தூர்ச் சந்தி, மீசாலை.

**மயூ கொமினிக்கேசன்**
யூனியனடி (இமையாணன்),
உடுப்பிட்டி.

**டால்றன் கல்வி நிலையம்,**
துன்னாலை, கரவெட்டி.

**C.M.E. கல்விநிலையம்**
ஐயனார் வீதி. பருத்தித்துறை.

**எடிசன் அக்கடமி**
வைமன் வீதி. யாழ்ப்பாணம்.

வகுப்புக்களும், பயிற்சிகளும் சனி, ஞாயிறுகளில் அந்தந்தப் பகுதிகளிலே ஜூலை மாதம் முதல்வாரத்தில் ஆரம்பமாகும். மேலதிக தகவல்பெற விரும்புவோர் 0777 570138 இல் ஆசிரியையிடம் தொடர்புகொள்ளவும்.

முக்கியகுறிப்பு:-

1) பெண்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
2) Machinery பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு Batch இலும் 15 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
3) கட்டணங்கள் இரு தவணை முறையில் செலுத்தலாம்.

(32936)(34-13-19-21)

# இளம் வயதினருக்கு இலகுமுறையில் கணனி அறிவு புகட்டப்பட வேண்டும்


## அதற்கு பி.சி.ஹவுஸ் உரிமையாளர் றிசான் கூறும்வழி

வர்த்தக ஸ்பெஷல்

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கொள்ளுப்பிட்டி பி.சி.ஹவுஸ் பிறைவேட் லிமிட்டெட் உரிமையாளர் எஸ்.எச்.எம்.றிசான் கடந்த 8 ஆம் திகதி தோன்றி தனது தொழில் முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

இளம் வயதினருக்கு இலகு முறையில் கணனி அறிவு புகட்டுவதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி றிசான் விளக்கினார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக்க சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் றிசானை செவ்வி கண்டனர்.



ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சமுதிக்க சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும், தொழிலதிபர் எஸ்.எச்.எம்.றிசானை செவ்வி காண்கிறார்கள். வங்கி அதிகாரிகள், மொழிபெயர்ப்பாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

*கேள்வி:* கம்பியூட்டர் உற்பத்தியிலும் விற்பனையிலும் மிகவும் போட்டி திகழ்கின்றது. இந்தத் துறையில் பல நிறுவனங்கள் போட்டியில் ஈடுபட்டுள்ளன. தாங்கள் இந்தத் துறையில் எப்படிச் சாதனை படைத்தீர்கள்?

*பதில்:* நான் கல்வி கற்றுப் பாடசாலையை விட்டு வெளியேறி கடற்படையில் சேர்ந்தேன். கடற்படைக் கப்பலில் பொறியியலாளராக இருந்தேன். அப்போது சர்வதேச மட்டத்தில் தொடர்பாடல் மற்றும் முக்கிய விடயங்களில் கம்பியூட்டரின் பயன்பாடு பற்றி அறிந்து கொண்டேன். இது என்னை இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தியது. இன்று உலகம் தொடர்பாடல் துறையில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இப்படியான ஒரு முன்னேற்றப் பாதையில் உலகமே கம்பியூட்டர். கம்பியூட்டரே உலகம் என்ற ஒரு சூழ்நிலை உருவாகியபோது நான் இத்துறையில் காலடி எடுத்துவைத்தேன்.

*கேள்வி:* இலங்கையில் இதன் போட்டி வியாபாரம் எப்படியுள்ளது? அதை உங்களது நிறுவனம் எப்படி கையாள்கிறது?

*பதில்:* இலங்கையைப் பொறுத்தவரை பல நிறுவனங்கள் கம்பியூட்டா மற்றும் அதன் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகின்றன.

குறிப்பாக சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் குறைந்த விலையில் கம்பியூட்டர் உதிரிப்பாகங்களைப் பெற முடியும். எனது ஒரே நோக்கம் இத்துறையில் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை மேலும் அதிகரிக்க வேண்டும். புதுமையைப் புகுத்த வேண்டும் என்பதாகும். பி.சி.ஹவுஸ் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட எனது நிறுவனம் இன்று சிறந்த நிறுவனங்களில் ஒன்றாகவும் முன்னணி நிறுவனமாகவும் திகழ்கின்றது.

*கேள்வி:* இத்துறையில் ஈடுபட்டிருக்கும் தாங்கள் வெற்றிகரமாக வியாபாரத்தைக் கொண்டு செல்வதற்கு கையாளும் முறைகள் பற்றிக் கூற முடியுமா?

*பதில்:* எனது நிறுவனம் ஆரம்பிககப்பட்ட காலத்திலிருந்தே பல சிறந்த தொழில்நுட்பவியலாளர்களும் அனுபவம் வாய்ந்த வேலையாள்களும் எனக்குக் கிடைத்தனர். இலங்கையில் 24 கிளைகள் உள்ளன. எனது நிர்வாகத்தில் பல திறமைவாய்ந்த ஊழியர்களின் பங்களிப்பு எமது முன்னேற்றத்துக்குப் பிரதான காரணமாகும்.

*கேள்வி:* இத்துறையில் இலங்கையின் வளர்ச்சி பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* கம்பியூட்டர் துறையில் எம்மைவிட இந்தியா மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளது, இத்துறையில் இலங்கை மிகவும் பின்னடைந்துள்ளது என்றே கூறவேண்டும். இலங்கையில் 20 வயதுக்குப் பின்னர்தான் கம்பியூடர் பற்றித் தெரிந்துகொள்ள முற்படுகின்றனர். இந்தியாவிலோ ஆரம்பக் கல்வியின்போதே கம்பியூட்டர் பற்றி மாணவர்களுக்கு கல்வியூட்டப்படுகிறது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவேண்டும்.

*கேள்வி:* தாங்கள் இதுபற்றிக் கூற விரும்பும் கருத்தென்ன? இத்துறையை எப்படி முன்னேற்றுவது?

*பதில்:* நாம் இலங்கையில் 24 கிளைகளைக் கொண்டு செயற்படுகின்றோம். கம்பியூட்டர் அறிவைக் கிராமப்புறம் வரை பரப்பவேண்டும் என்பதே பிரதான நோக்கமாகும்.

கம்பியூட்டருக்குப் பயன்படுத்தப்படும் பல உதிரிப்பாகங்களை இங்கேயே தயாரிக்கக் கூடிய வசதிகள் உள்ளன. எனவே, நாம் உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் முயற்சியிலும் எதிர்காலத்தில் கம்பியூட்டரை இங்கேயே வடிவமைக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு எண்ணியுள்ளோம்.

கம்பியூட்டர் அறிவு என்பது மிகவும் முக்கிய விடயமாகியுள்ளது. உலகமே கிராமமாகிவிட்டது. எனவே, வெளி உலகுடன் நாமும் ஒன்று சேர்ந்து பயனளிக்க வேண்டும்.

இதற்கான இலகு வழிகளை நாம் அறிமுகப்படுத்துவோம். இத்துறையை வளர்த்து ஊக்கமளிக்கத் தேசியக் கொள்கை மிகவும் அவசியமாகும்.

- இவ்வாறு றிசான் தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் மற்றும் புலிகள் குறித்த இந்தியக் கொள்கையை மீளாய்வு செய்க!

## பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழ் மக்களின் அமையம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்12

தமிழ்பேசும் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியன சம்பந்தமாக இந்தியக் கொள்கையை சாதகமான முறையில் மீளாய்வு செய்யவேண்டும். அத்துடன், விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பை மீளாய்வு செய்து இரத்துச் செய்யவேண்டும்.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம் இந்தியப் பிரதமரை மேற்கண்டவாறு கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஊடாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமையத்தின் இணைப்பாளர் சி.வி.கே. சிவஞானத்தால் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நாட்டின் தமிழ்பேசும் மக்கள் பாகுபாடு, அடக்குமுறை போன்றவற்றால் பாதிக்கப்பட்டமை பற்றி தாங்களும் இந்திய அரசும் முழுமையாக அறிந்திருக்கின்றீர்கள் என்று திடமாக நம்புகின்றோம்.

இவற்றுக்கெதிரான எமது ஜனநாயக மற்றும் அமைதியான போராட்டங்கள் யாவும் தொடர்ச்சியான அரசுகளினால் இராணுவ பலம்கொண்டு நசுக்கப்பட்டமை பற்றியும் தாங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இந்தப் போராட்டங்கள் தோல்வி கண்ட நிலையிலேயே தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதி ஆயுதப் போராட்டத்தில் இறங்குவதற்கு தமிழ் இளைஞர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

★ தமிழ் பேசும் மக்களது இந்த விடுதலைப் போராட்டத்தை விசுவாசமாகவும், அர்ப்பணிப்புடனும் தொடரும் ஏக சக்தியாகவும், தனிச் சக்தியாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே திகழ்கின்றது. இதன் காரணமாகவே தமிழ் பேசும் மக்கள் கடந்த 2001, 2004 நாடாளுமன்றத் தேர்தல்கள் மூலம் விடுதலைப் புலிகளை தமது ஏகப் பிரதிநிதிகள் என வெளிப்படையாக பிரகடனம் செய்துள்ளனர். இந்த விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அபாரமான வெற்றி இதற்கான தெளிவான ஆணையாகும்.

தமிழ்த் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்திய அரசு ஒரு சாதகமான பங்களிப்பைச் செய்யும் என்ற ஐக்கிய முற்போக்கு முன்னணியின் குறைந்த பொது வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது எமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

★ ஆயினும் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் நீடித்து வெளியிடப்பட்ட பிரகடனம் மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

★ முதலில் நாம் சொந்த முறையில் அறிந்தவகையிலும் எமக்கிருக்கும் தகவல்களின் அடிப்படையிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்பதை உத்தரவாதமாகக் கூறமுடியும். மறுபுறத்தில் தமிழர்கள் இந்தியாவுடன் நினைவுக் கெட்டாத காலம் முதல் கொண்டுள்ள தமிழ்மொழி, கலாசார மற்றும் பல்வேறு உறவுகள் காரணமாக இந்தியாவுடன் சுமுகமான நட்புறவைப் பேணவே அவர்கள் முயன்று வருகின்றனர். அன்ரன் பாலசிங்கம் அவர்களதும், சுபதமிழ்ச்செல்வன் அவர்களதும் கூற்றுக்கள் இதற்கு சான்று பகரும்.

★ விடுதலைப் புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவி பிரச்சினைகளை தோற்றுவிப்பர் என்ற அச்சம் ஆதாரமற்றதும் எந்தச் சாட்சிய மூலமும் நிரூபிக்கப்படாததாகும்.

★ அதேபோல விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டை ஒரு தளமாகப் பாவித்து பெற்றோல், டீசல் என்பனவற்றை கடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டும் ஆதாரமற்றது. இப்பொருள்கள் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதி உள்ளிட்ட இந்த நாட்டின் சகல பகுதிகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆகையால் இந்தியாவிலிருந்து மட்டுமல்ல வேறெங்கிலிருந்தும் இவற்றைக் கடத்த வேண்டிய தேவை இல்லை.

★ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. அதன் பெயர் சாட்சிபகர்வது போல இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள், சட்டபூர்வமான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் விடுதலை உணர்வை முன்வைத்து தொடர்ச்சியாகப் போராடும் ஒரு விடுதலை இயக்கம் இதுவாகும்.

★ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பது அவர்கள் தமிழதேசியப் பிரச்சினையை கலந்துரையாடல் மற்றும் பேச்சுக்கள் மூலம் தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு உள்ள அர்ப்பணிப்பையும். திடசங்கற்பத்தையும் தெளிவாகக் காட்டி நிற்கின்றனர் என நாம் கருதுகின்றோம்.

★ சிறிலங்கா அரசபடைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் உள்ள இராணுவ சமபலமே சிறிலங்கா அரசை விடுதலைப் புலிகள் தலைவருடன் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு பேச்சுக்கு முன்வர நிர்ப்பந்தித்தது என்பதை கருத்திற்கெடுப்பீர்கள் என்பதில் நாம் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

★ ஜனநாயக முறையில் தம்மால் பெருமைப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் அதன் தலைமையுடனும பேச்சு நடத்தி தமது அரசியல் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வு எட்டப்பட வேண்டும் என வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஏங்கி நிற்கின்றனர். ஆகவே, மகத்தான இந்திய தேசம் இந்த விடயத்தில் நியாயமானதும், சாதகமானதுமான பங்களிப்பை செய்யவேண்டும் என்பதே எமது அவாவாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்வது ஒரு தடங்கலாகவே இருக்கும்.

★ எனவே தங்களை மீண்டும் பின்வருமாறு வேண்டுகின்றோம்.

அ) தமிழ் பேசும் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தமான இந்தியக் கொள்கையை சாதகமான முறையில் மீளாய்வு செய்தல்.

ஆ) இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடைநீடிப்பை மீளாய்வு செய்து அதைக்கூடிய விரைவில் இரத்துச் செய்தல்.

இ) தாமதமின்றி சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவுதல்.

ஈ) விடுதலைப் புலிகளால் கோரப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கான சாதகமான நடவடிக்கைகளை எடுத்தல்.

உ) தனி அரசுகோரி தொடர்ச்சியாகப் போராடி வந்த விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சமஷ்டி ஆட்சிமுறையை பரிசீலிக்கத் தயார் என்ற நிலையிலும் இந்த நிலைப்பாடு ஒஸ்லோ பேச்சுக்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையிலும் ஓர் அர்த்தமுள்ள சமஷ்டி அரசு முறை மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு சாத்தியமான சகல அனுசரணை நடவடிக்கைகளாயும் எடுத்தல் - என்றுள்ளது.

(-8-3)

### கட்டாக்காலிகளால் பயிர்கள் அழிவு

ஒட்டுசுட்டான்,ஜூன்12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இரவு நேரத்தில் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற கால்நடைகளால் பயிர்கள் பெருமளவு அழிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, கால்நடைகளை இரவு நேரங்களில் பட்டிகளில் அடைத்துப் பயிர்களைப் பாதுகாக்க உதவுமாறு அப்பிரதேச விவசாயிகள் கால்நடை உரிமையாளர்களைக் கேட்டுள்ளனர். (-10-341)

### அழகுக்கலை பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

இந்திய அழகுக்கலை நிபுணர் பிரபா ரெட்டியின் மாணவியினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அழகுக்கலை பற்றிய கலந்துரையாடலொன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-ரி)

### பாடசாலைக்கு பழைய மாணவன் நிதி

குடத்தனை,ஜூன்12

புற்றளை மகா வித்தியாலயத்திற்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியினை கனடாவில் வசிக்கும் மேற்படி வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒருவர் வழங்கியுள்ளார். (10-78)

### ஆன்மீகச் சொற்பொழிவு

குடத்தனை,ஜூன்12

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை 'கண்ணனின் கருணை' என்னும் தலைப்பில் சிவஞானம் பாலமுரளி சொற்பொழிவாற்றவுள்ளார்.(10-78)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தீராந்தி, பனைமரம், தகட்டு ஓடு, முகட்டு ஓடு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 132, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். T.P. 222 6105.(32953)

தற்போது பாவனையிலுள்ள மோட்டரோலா (சோலர் இல்லாதது) தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P. 0777 563107 (32915)

27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டைமாடியுடன்- சமுர்த்தி வங்கிக்கு முன ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (35429)

கலர் மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருள்கள், பூங்கன்றுகள், சாடிகள், பல இனக் குருவிகள், கூடுகள் அல்சேஷன், பொமேரியன் நாய்க் குட்டிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (32895)

புதிய NPHK தொடரிலக்கமுடைய Honda CD - 90 Benly (Batch Model) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 250904 (32958)

10மாதங்கள் நிரம்பிய அல்ஷேஷன் கறுப்புநிற ஆண் நாயொன்று விற்பனைக்குண்டு. சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு: ஜ.ஸ்ரீதரன, MS வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (32957)

Pure Bred Doberman Picher (2½ மாதம் நிரம்பிய) ஆண் நாய்க் குட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூா வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32959)

நல்ல தரமான Prima Broiler மற்றும் Prima Layer (Brown/White) கோழிக்குஞ்சுகள் 21.06.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். Suddi Farm (வட்டுக்கோட்டை) பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32960)

## மாதிரி ஆரம்பப் பாடசாலைகள்

கொழும்பு,ஜூன்12

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 120 ஆரம்பப் பாடசாலைகள் மாதிரி ஆரம்பப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 கோடியே 50 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(10-ரி)


## அறிவித்தல்

கூளாவடி, ஆனைக்கோட்டை தபாற்கந்தோருக்கு முன்பாகவுள்ள மணியன்காடும் ஞானியடைப்பும் என்னும் ஒருபரப்புக் காணியும் வீடும் காலஞ்சென்ற எனது சகோதரி செல்வி கந்தசாமி மல்லிகாராணிக்குச் சொந்தமானது. இதனை எனது சகோதரர் சற்குணானந்தன் விற்பதற்கு முயற்சிப்பதாக அறிகிறேன். இவ்வீட்டு வளவில் காலஞ்சென்றவரின் மற்றொரு சகோதரராகிய எனக்கும் சமபங்கு உண்டென்பதையும் எனது சம்மதமின்றி அக்காணியையும் வீட்டையும் எவரும் விலை கொடுத்து வாங்கவேண்டாமெனவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

க.நித்தியானந்தன்
53/4, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.

(32956)(21-13-33)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராசலிங்கம் அமரசோதி

தோற்றம் 03-10-1948 மறைவு 05-06-2002

திதி- 12.06.2004

ஆண்டவன் அடிசேர்ந்த எங்கள் குல தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறுமோ ~
உங்கள் நினைவு
எங்கள் இதயம் துடிக்கும் வரை உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் துடித்துக் கொண்டே இருக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்கு எங்கள் பிரார்த்தனைகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
தாய், மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்,

17/3, சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,

(32729)(21-39-13)


## வேலை வாய்ப்புக்கான பயிற்சிநெறி!

* பரீட்சை எழுதிவிட்டுச் சும்மா இருக்கிறீர்களா?
* தகுதிக்கேற்ற வேலையைத் தேடிக்கொள்ள அரிய சந்தர்ப்பம் குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற......!

நேரடி ஒலிபரப்பாளர் / ஊடகவியலாளர் பயிற்சிநெறிகள்!!

ஜோ - எகட்டனால் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சிநெறி!

பயிற்சி வழங்குபவர்கள்

- கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
- மிகப்பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள்.

பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000/= மட்டுமே

ஆரம்பம் ஜூன் - 19 ஆம் திகதி பி.ப.3 மணி

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /- மட்டும்

பதிவுக்கான முடிவு திகதி: 15.06.2004

ஆங்கிலம் தவிர்க்கப்பட்டுள்ளது

தமிழ்மொழி திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சா) தரம் சித்தி

★ பதிவுக் கட்டணத்தை நேரில் செலுத்திப் பதிவை மேற்கொள்ளலாம்.

தொடர்பு: செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P. 222 7227

★ காரியாலயநேரம்: காலை 10.30 மணி - பிற்பகல் 3 மணிவரை. (சி-35503)(36-19-26-21)



## City & Guilds London Exam Dec - 2004

Electrical Engineering, Electronic Engineering, Tele Communications systems Engineering ஆகிய வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளோம். இப்பரீட்சைக்கான Theory வகுப்புக்கள் நடத்துவதற்கு வாடகைக்கு அல்லது வீத அடிப்படையில் கல்வி நிறுவனம் ஒன்று தேவைப்படுகிறது. ஒரு வார காலத்துக்குள் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு:

**K.Chandirabose I, Eng MIEIE APSS International,**
*57 E.S. Fernando Mawatha, Colombo - 06.*
T.P: 250 6803
E-mail: kcbose@sltnet.lk.

(C/35531)(38-21-13)


## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

### 8ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்) சங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

க.கோபாலகிருஷ்ணன்,
கௌரவ செயலாளர்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,
47/2 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/35522)(42-21-13)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலேஸ்வரன் ஞானேஸ்வரி



அராலி தெற்கு, மாதாங்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி, ஞானியார் கோவிலடியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி நகுலேஸ்வரன் ஞானேஸ்வரி 06.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா கந்தஞானியார் (உபதபாலதிபர்)- வேதநாயகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், கருகம்பனை தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி பூதப்பிள்ளை பொன்னம்பலம் LMS, J.P. தங்கம்மா தம்பதிகளின கனிஷ்ட மருமகளும் கஜன், பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (U.K.), நடராசா (அதிபர், பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை), ஜெகதீஸ்வரி (கொழும்பு), அருணகிரிநாதன் (உபதபாலதிபர், அராலி), ஞானசம்பந்தன் (காசாளர், இலங்கைவங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இளையதம்பி (U.K.), அமிர்தமலர், ஓய்வுபெற்ற வைத்தியகலாநிதி விக்கினேஸ்வர கடாச்சன் (கொழும்பு), கோமதி, சரஸ்வதி, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் (பிரதி பொலீஸ்மா அதிபர்) மற்றும் இராஜேஸ்வரி (U.K.) பரமேஸ்வரி (கனடா), மகேஸ்வரி (தெகிவளை), புவனேஸ்வரி, இராஜேந்திரன் (ஆஸ்திரேலியா), அருளம்பலம (சட்டத்தரணி U.K.), கமலாதேவி (தெகிவளை), கமலாம்பிகை (தெகிவளை), நகுலேஸ்வரி (U.K.) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

P.Naguleswaran,
No.4, Pearl Road, Walthmstow,
London E17 4Qz
T.P.: 0208-5212704.

தகவல்:
க.ஞானசம்பந்தன் (சகோதரன்),
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

(32954)(34-21-13-19)

### திருமதி மனோன்மணி சிவபாதசுந்தரம்



கோட்டைக்காடு, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி மனோன்மணி சிவபாதசுந்தரம் அவர்கள் 2004.06.10 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மு.சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், கிருஸ்ணன் கனகம்மாவின் அனபுப புதல்வியும் முருகன் சின்னம்மாவின் அன்புமருமகளும் உதயகுமாரன், உதயகுமாரி, உதயணன், உதயமலர், உதயகலா (உதவி அதிபர், யா/ஏழாலை மேற்கு, சைவசன்மார்க்க வித்தியாசாலை), உதயகலைமகள், உதயசூரியன், உதயரமணி ஆகியோரின் அன்புத்தாயாரும் புவனாம்பிகை, சாம்வெஸ்லி, உஷானி, மனோகரன், செல்வகுமார், பத்மஜோதி, தர்மலிங்கம், ஆகியோரின அன்பு மாமியும் சாரங்கபாணியின் மைத்துனியும் தியாகராஜா, மகாதேவன் (ஓய்வுபெற்ற அதிபர்), சுப்பிரமணியம், கோகிலநாதன், பத்மநாதன், தேசிகநாதன், யோகநாதன், சிவபாக்கியம், நகுலாம்பிகை, விமலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2004.06.13) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோட்டைக்காடு,*
*சுன்னாகம்*

தகவல்:
உதயா போட்டோ

(32961)(43-21-13)

### ஞானப்பிரகாசம் அருளானந்தம்



காம் வீதி, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் 70/21, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அருளானந்தம் (ஓய்வுபெற்ற அதிபர் சென்றோக் பாடசாலை) 11.06.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - சூசன் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - மாரிமுத்து தம்பதிகளின் மருமகனும் மற்றும் யோகராணியின் அன்புக் கணவரும் ஜெனற் மகிழினியின் (இத்தாலி) அன்புத் தந்தையும் செல்வின் அருள்ராஜின் (இத்தாலி) மாமனாரும் அன்ரனி செரவினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

70/21, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:- 0776147280.

தகவல்:
யோகராணி (மனைவி).

(32964)(34-21-13)

## தென்மராட்சி கிழக்கில்
# உயர்பாதுகாப்பு வலயத்தில் குடியமர படைத்தரப்பினர் பச்சைக் கொடி

தென்மராட்சி,ஜுன்12

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அதி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்த படைத்தரப்பில் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது.

தத்தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமரவுள்ள மக்கள் தற்போது தங்கியுள்ள இடங்களின் விவரங்களைத் திரட்டுமாறு அந்தந்தப்பிரிவு கிராம அலுவலர்களுக்கு அப்பகுதிப் படையதிகாரி சில்வா தெரிவித்துள்ளார்.

உசன் படையணி முகாமில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தில் படையணி உயர் அதிகாரி சில்வா, தென்மராட்சி பிரதேச செயலர் செஸ்ரீனிவாசன், அதிஉயர்பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள 12 கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தற்போது தங்கியுள்ளவர்கள் உடனடியாகத் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் விவரங்களைப்பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

பாலாவி, கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, கொடிகாமம், உசன், கரம்பகம், விடத்தற்பளை, கெற்பெலி, எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில்தெற்கு ஆகிய 12 கிராம அலுவலர் பிரிவுகளில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீளக் குடியமர முடியாத மக்களையே பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)

# கோப்பாய் பொலீஸ் நிலையப் பகுதியில் விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்படும்
## பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கை

வலி.கிழக்கு,ஜுன்12

கோப்பாய் பொலீஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் திருட்டுக்களைக் கட்டுப்படுத்தும் முகமாக கிராமங்கள் தோறும் பொது அமைப்புக்களின் உதவியுடன் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் விழிப்புக் குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதன்முதற்கட்டமாக திருட்டுக்கள் நடைபெறும் சில பகுதிகளில் அப்பகுதிக் கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உதவியுடன் விழிப்புக் குழுக்களை அமைத்துள்ளார்.

ஏனைய பகுதிகளுக்கும் விழிப்புக் குழுக்களை அமைக்க அப்பகுதிப் பொது அமைப்புக்களையும் பொது மக்களையும் கூட்டி விழிப்புக் குழுக்களை அமைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (10-180)

# கிழக்குப் பல்கலையில் மருத்துவபீடம்; கட்டமைப்புத் திட்டங்கள் தயார்

மட்டக்களப்பு,ஜுன் 12

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை அமைப்பதற்கான கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 5ஆம் திகதி மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா இசை நடனக் கல்லூரியில் இடம் பெற்ற கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக குழுத் தலைவர் பேராசிரியர் பி. ஆர்.ஆர். என் மென்டிஸ் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இயல்புநிலை ஏற்பட்டதும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டதையடுத்தே மேற்படி கட்டமைப்பு வரைபுகள் தயரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு முதல் 50 மாணவர்கள் இப்பீடத்தில் அனுமதிக்கப்படுவரெனவும் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதனை அமைப்பதற்கான நிதி ஏற்பாடுகள் உள்ளடக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8)

## பரிஸில் நடேசனுக்கு அனுதாபம்
# இலங்கைப் பத்திரிகையாளர்களின் நிலைகுறித்து சர்வதேச மட்டத்தில் கவலை தெரிவிப்பு

பரிஸ்,ஜுன்12

இலங்கையில் பணிபுரியும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்புக் குறித்து சர்வதேச மட்டத்தில் கவலை ஏற்பட்டுள்ளது என்று எல்லைகளற்ற பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதி வின்செண்ட் புரொஸல் கூறினார்.

பரிஸ் நகரில் ஊடகவியலாளர் நடேசனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் புரொஸல் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையில் கொல்லப்பட்டுள்ள பத்திரிகையாளர்களில் நடேசன் முதலாவது பத்திரிகையாளர் அல்ல, 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் கொல்லப்பட்டார். இவ்வாறான கொலைகள் தொடர்கின்றன என்றார்.

கூட்டத்துக்கு வின்செண்ட் தேவசகாயம் தலைமைவகித்துப் பேசுகையில், நடேசனின் கொலைபற்றி உடனடியாக சுயேச்சையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றார்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.வி.கிருபாகரன் பேசும்போது, இலங்கை அதிகாரிகளின் கைகளில் பத்திரிகையாளர்கள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கினார். இவர்கள் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டதாகக் கூறப்படுவதில் அர்த்தமில்லை. கொலையாளிகள் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அது இரகசியமல்ல. இதில் ஆச்சரியமென்னவென்றால், கொலைகள் செய்யப்படுகின்ற விதமும் அவை சர்வதேச மேடைகளில் நியாயப்படுத்தப்படுவதும்தான் என்றார்.

ஈழநாடு ஆசிரியர் சிவகுரு பாலச்சந்திரன், ஈழமுரசு நிர்வாக ஆசிரியர் திரலோன், தமிழ் தொலைக்காட்சி இணைய செய்தி ஆசிரியர் (ரி.ரி.என்) சிறிதரன், ஏ.பி.சி.வானொலி பிரதிநிதி அரியரட்ணம் மற்றும் பல ஊடகவியலாளர்கள் கூட்டத்தில் பேசினார்கள்.

நடேசன் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டிருப்பதாக பேச்சாளர்கள் அனைவரும் கண்டித்தனர். இலங்கை அரசு இதற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

நடேசனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

பரிஸிலுள்ள டெம்பல் ஹோல் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏராளமான பத்திரிகையாளர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு நடேசனுக்கு அஞ்சலி செலுத்தினர். (ப)

## காற்றினால் மரங்கள் முறிந்தன!

தென்மராட்சி,ஜுன்12

மட்டுவில் தெற்குப் பகுதியில் கடந்த 9ஆம் திகதி இரவு வீசிய மினி சூறாவளியினால் பயன்தகு மரங்கள் பல முறிந்துள்ளன.

அப்பகுதியில் ஏற்கனவே ஷெல் வீச்சுக்களால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட தென்னை, பனை மரங்கள் உட்பட பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பாரிய மரங்கள் முறிந்துள்ள போதிலும் குடியிருப்புக்கள் எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-117)

## கண்காட்சி பிற்போடல்

குடத்தனை,ஜுன்12

முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனத்தினால் வடமராட்சி வலய மட்டத்தில் இன்றும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நடத்தப்படவிருந்த கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறுமென வடமராட்சி முன்பள்ளி வலய இணைப்பாளர் செல்வி.பி சுதாஜினிதேவி தெரிவித்துள்ளார். (10-78)

## யூரோவில் நிறுவனத்தின் கருத்தரங்குகள்

பங்குச்சந்தை மற்றும் திறைசேரி உண்டியல் தொடர்பான இருவேறு கருத்தரங்குகள் யூரோவில் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கும் நல்லூர் செம்மணி வீதியிலுள்ள 'யூரோவில்' மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ள மேற்படி கருததரங்குகளில் பாட்லீட் பலோறி பங்குத் தரகர் நிறுவனத்தின் விரிவுரைகளை நடத்தவுள்ளனர்.

மேலும் ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கொன்றும் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-ரி)

# கிளாலியில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை

வாடியடி,ஜுன்12

கடந்த புதன்கிழமை கிளாலி கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி, ஞானிமடத்தைச் சேர்ந்த ஆனந்தசிவம் காண்டீபன் (வயது24), பூநகரி, பள்ளிக்குடாவைச் சேர்ந்த சோமசுந்தரம் இருதயராஜா (வயது19) ஆகிய இரண்டு மீனவர்களையுமே காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் சிலர் இவர்களைத் தேடிச் சென்றபோது மீனவர்கள் எவரும் இன்றி வள்ளம் ஒன்று மட்டும் கடலில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் -

மற்றொரு வள்ளத்துடன் இரண்டு வெளி இணைப்பு இயந்திரங்களையும் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-403)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப பணிமனைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் விசேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு சரசாலை உப மணிமனையில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் பொருளாளர் உட்பட 5பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-170)

## சூழல் பாதுகாப்பு மாதத்தையொட்டி
# பரந்தன் பிரதேசத்தில் சிரமதானப்பணி

பரந்தன்,ஜுன்12

சூழல் பாதுகாப்பு மாதமாக இம்மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து பரந்தன் பிரதேசத்தில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பரந்தன் பிரதேசத்திலுள்ள கண்டாவளைப் பொதுச்சந்தைப் பகுதி, அரச மருத்துவ நிலையம் என்பனவும் தருமபுரம் சந்தை, விளையாட்டரங்கு போன்றனவும் விசுவமடு மாவீரர் மண்டபம் மற்றும் முரசுமோட்டை ஊரியான் கிராமப் பொது நோக்கு மண்டபச் சுற்றாடலும் இச்சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதிநிதிகள், கிராம உத்தியோத்தர்கள் மற்றும் பொது மக்கள் போன்றோர் இப்பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-352)

# கிளிநொச்சி வலய மாணவர்களுக்கு காலை உணவு வழங்க நடவடிக்கை

பரந்தன்,ஜுன்12

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் ஒன்பது வரை கல்விகற்கும் மாணவர்களுக்குக் காலையுணவு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான பயிற்சிப் பட்டறையும், கலந்துரையாடலும் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.வயிரமுத்து தலைமையில் முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள் ரவி ஆனந்தராசா, சி.சுகிர்தன், க.ராதிகா ஆகியோர் பயிற்சியை வழங்கினர். நிகழ்வின் தலைவர் க.வயிரமுத்து, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இப்பயிற்சிப்பட்டறையில் கண்டாவளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள், கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தி ஆணையாளர் அலுவலகப் பிரதிநிதி ந.நாவேந்தன், கிளிநொச்சி செயலக திட்டமிடல் உத்தியோகத்தர் சி.சண்முகநாதன் மற்றும் இப்பகுதியைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சியுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு மாகாணக் கல்வியமைச்சு, உலக உணவுத் திட்டம் மற்றும் புனர்வாழ்வ புனர்நிர்மாண மீள் குடியமர்வு அமைச்சு ஆகியன நிதியுதவி வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-352)

# மக்கள் முகம்



கைதடி அரச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர் பிரேமா சிவசண்முகராஜா இந்தியாவின் தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவம் சிறப்புத்துறையில் எம்.பி. பட்டம் பெற்றுள்ளார்.

என்பு நோய்கள், தோல்நோய்கள், 'வர்ம மருத்துவம், உளநோய்கள், காயகல்பம் என்பவற்றை உள்ளடக்கியது சிறப்பு மருத்துவத்துறையாகும். இத்துறையில் பட்டம் பெற்றுள்ள ஒரேயொரு இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

★ ★ ★



பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்த அல்வின் எட்வின் பீரிஸ் அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ உதவியாளரான இவர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (10-15)

★ ★ ★



கந்தரோடையைச் சேர்ந்த செல்லையா வைத்தியநாதன் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

சுன்னாகம் தெற்கு கிராமசேவை உத்தியோகத்தராகக் கடமைபுரியும் வைத்தியநாதன் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினராகவும், கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைச் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அகில இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் செயலாளராகவும் இவர் விளங்குகின்றார். (10-152)

★ ★ ★



உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த பரஞ்சோதி ஆனந்தகுமார் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ உதவியாளரான இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

உடுப்பிட்டிச் சந்தி வல்லைவெளி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும், உடுப்பிட்டி இலகடி சனசமூக நிலையத் தலைவரும், அமெரிக்கன்மிஷன் பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினரும் ஆவார். (10-15)

★ ★ ★



வடமராட்சி துன்னாலை அ.மெ.த.க.பாடசாலை, கரவெட்டி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், சிறந்த சமூக, சமயத் தொண்டருமான கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த இராசதுரை புஸ்பராஜா அண்மையில் யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

சமய சேவாமணி என்று ஏற்கனவே பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட இவர் கொழும்பு ஜெனரல் இண்டஸ்றீஸ் லிமிட்டெட்டின் முன் னாள் முகாமையாளருமாவார். (10-15)

# தென்மராட்சியில் இரு பாடசாலைகளுக்கு 120 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்12

தென்மராட்சியில் கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்ட இரு பாடசாலைகளைப் புனரமைக்க ஒரு கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவற்றுக்கே கட்டட வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

இரு பாடசாலைகளுக்கும் இரு மாடிக்கட்டடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. கட்டடம் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேலும் 10 பாடசாலைகளுக்கு கட்டடம் அமைக்க 5 கோடி 50 லட்சம் ரூபா ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

இந்தக் கட்டடங்களை அமைக்கக் கேள்விப்பத்திரம் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பாடசாலைகளுக்கு 30 லட்சம் ரூபா செலவில் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் 2ஆயிரம் மாணவர்களும், 150 ஆசிரியர்களும் பயன்பெறவுள்ளனர். கடந்த வருடமும் நிகொட் நிறுவனத்தினால் 1கோடி 60 லட்சம் ரூபா செலவில் 70 பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் மாணவர் தளபாடங்களும் 500 ஆசிரியர் தளபாடங்களும் வழங்கப்பட்டன.(8-3-ரி)

# 400 இலங்கையர்கள் சோமாலியாவில் அந்தரிப்பு

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி அழைத்துச்செல்லப்பட்ட இலங்கையர்கள் 400 பேர் சோமாலியாவில் அநாதரவாக விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தாலிக்கு அனுப்புவதாகக் கூறி இவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து நான்கு முதல் எட்டு லட்சம் ரூபாவரை பெற்றுக்கொண்ட நான்கு முகவர்கள் இவர்களை சோமாலியாவில் அநாதரவாகக் கைவிட்டுச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், 400 பேரும் உணவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் பட்டினியால் உயிரிழந்துவிட்டார் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு கைவிடப்பட்ட அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களென்று தெரியவருகிறது. (ஐ-க)

## நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு சனசமூக அபிவிருத்தி அலுவலராக ம.ஞானவேல்ராஜா கடந்த முதலாம் திகதியில் இருந்து நியமனம் பெற்றுள்ளார். (10-185)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட யாழ். நல்லூரைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி சுதாகர் விஜிதா தம்பதியரின் செல்வப் புதல்வி

தேனுஜா



இன்று (12.06.2004) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை நல்லூர் 59ஆம் இலக்க சங்கிலியின் வீதியிலுள்ள இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றார். செல்வி தேனுஜாவை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, சித்தி, சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாக நலமுடன் வாழவேண்டுமென்று நல்லைக் கந்தனை வேண்டி வாழ்த்துகின்றார்கள். (32962) (11-12-33)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் 2004/2005

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 27-06-2004 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.00 மணி

நிர்வாகிகள் தெரிவுக்கான தேர்தல் நியமனப்பத்திரங்கள், பிரேரணைகள் இருப்பின் 20-06-2004 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். விவரங்கள் அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சாதாரண அங்கத்துவத்தை 20-06-2004 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் புதுப்பிக்கவும். புதிய அங்கத்துவம் பெறவிரும்புவோர் கல்லூரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். மதிய போசன அன்பளிப்பு ரூபா 100/- 25-06-2004இற்கு முன்னர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

ந.சிவகடாட்சம் (அதிபர்) தலைவர் — க.விநாயகலிங்கம் செயலாளர்
(சி/35541) (21-11-12-33)


சிவமயம்



இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R அவர்கள் யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு நான்காவது தடவையாக வருகை தந்துள்ளார்.
திரு.P.T.R. அவர்களால்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர் கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றம் இல்லையா, புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா? எதுவாயிருந்தாலும் ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்.

இடம்: பாலாஜி இன் விடுதி
293, கஸ்தூரியார் வீதி,
(கன்னாதிட்டி சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
(32976)(29-11-12-33)



### வான் விற்பனைக்கு

58-XXXX தொடர் இலக்கமுடைய டொல்பின் ஒட்ட மற்றிக் ரக வான் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி,
(சி/35544) யாழ்ப்பாணம்.

### தையல் தொழிலாளர்கள் தேவை

எமது தையல் நிலையத்துக்கு அனுபவம்வாய்ந்த தையல் தொழிலாளர்கள் தேவை. தொழில் பழக விரும்புபவர்களும் தேவை.

கீழ்க்காணும் முகவரிக்கு உடனே நேரில் சமுகமளிக்கவும்.

றூபா தையலகம்
978, கே.கே.எஸ்.றோட்,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- S.ரூபன்
(32980)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=

BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. Road, Jaffna.
Telephone: 021 222 3081
(சி-35542)

### நாகம்ஸ் சுன்னாகம்



டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ் (ரீல்ஸ்) நடித்த
கில்லி
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00, 10.00
(சி/35399)(12)

### ராஜா யாழ்ப்பாணம்

3 ஆவது வாரம் (சில நாள்கள் மட்டும்)
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரிஷா நடித்த



காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517) (22)

### நிரஞ்சனாஸ் சங்கானை



அர்ஜுன், ரம்பா, ஆனந்தராஜ்
அடிமைச் சங்கிலி நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
INTREPID
(C-34420)(12)


## பருத்தித்துறை புனித அந்தோனியார் திருவிழா



பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருச்செருப பவனியுடன் தொடர்ந்து திருப்பலி, நற்கருணைப்பவனி, நற்கருணை ஆராதனையுடன் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 திருநாள் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்படும்.

-ஆலய நிர்வாகிகள்.

(32983)

## சிறுவர் அரங்கு
## Children's Theatre

(புதிய பயிற்சிப் பிரிவு ஆரம்பம்)



செயல்திறன் அரங்க இயக்கம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் - நான்கு மாதங்கள் (கிழமை நாள்களில் விரிவுரைகள் நடைபெறும்)
- பயிற்சி முடிவில் சிறப்பாகத் தேர்ச்சிபெறுவோர் தொழில்சார் ஆற்றுகையாளர்களாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- பாடவிதானம்
  - ★ சிறுவர் நாடக எழுத்துருப் படைப்பாக்கம்.
  - ★ நடிகருக்கான அடிப்படைப் பயிற்சி
  - ★ சிறுவர் நாடகத் தயாரிப்பு

எதிர்பார்க்கப்படும் தகுதி
1. க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 20 – 30
3. நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தி, அனுபவம் விசேட தகுதிகளாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 20.06.2004

தொடர்பு முகவரி: செயல்திறன் அரங்க இயக்கம்
Active Theater Movement
'அருளகம', ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (சி-35533) (11-12-33)


### இதோ முதியவர்களுக்கு ஓர் அரிய வசிப்பிட இல்லம்
## சாயி முதியோர் பராமரிப்பு இல்லம்

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு.

யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்களால் 07.01.2004 அன்று திறந்து வைக்கப்பெற்ற சாயி முதியோர் பராமரிப்பு இல்லம் இப்போது நல்லவிதமான பராமரிப்புடன் - சுத்தமான சைவ உணவு வழங்கலுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்த இல்லத்தில் சேர்ந்து வதிய விரும்புவோர் விவரங்களுக்கு:
Dr. ஈஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா,
372. பருத்தித்துறை வீதி.
நல்லூர். யாழ்ப்பாணம். T.P: 222 6543
என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

- நிர்வாகம்.

(32983) (11-12-33)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி இலக்கங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு இல: | 1403 |
| இரண்டாம் பரிசு இல: | 0144 |
| மூன்றாம் பரிசு இல: | 1264 |

பரிசில்களை எதிர்வரும் 25.06.2004இற்கு முன்னர் தமிழ் மன்றத்தில் பெற்றுக்கொள்ளவும்.

-தமிழ் மன்றம்.

(32978)


# YOGI BEAUTY PARLOUR
(Academy of Beauty Culture & Hair Dressing)
HOME SCIENCE ACADEMY

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புகள் 21-06-2004 முதல் ஆரம்பமாகவுள்ளன.
1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Therapy)
2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.
சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட், நல்லூர் யாழ்ப்பாணம்.
(நல்லூர் விரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
T.P.222 2796
(32979)(29)

# ஐந்தாண்டு நினைவஞ்சலி



அன்பின் பதிப்பில் 13-12-1980
ஆண்டவன் பறிப்பில் 12-06-1999

## சோதிநாதன் சோபநாத்

எம தருமை சோபா
ஐந்தாண்டு போனாலும்
நாம் உன்னை மறவோம்
உன் பிரிவால் துயருறும்

தாய், சகோதரர்கள்.

சிவகுல வீதி,
உரும்பிராய்,
உரும்பிராய் மேற்கு. (32988)(36-29-11-18)

தகவல்:
கோபிநாத் (சகோதரன்).

# நெஞ்சை விட்டு அகலாத ஈராண்டு நினைவலைகள்



## திருமதி கந்தைய அன்னம்மா (அன்னக்கா)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பதிலே சிகரமதாய்
நேசமுடன் வாழ்ந்த அன்னையே!
எங்கள் நினைவுகளில் நீயானாய்!

'கோக்கன்'
இணுவில் கிழக்கு.
இணுவில். (32987)(36-29-11-18)

- குடும்பத்தினர்.

# ஐடியல் அக்கடமி

சண்டிலிப்பாய் கிளை - காரைநகர்

## பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் - 2004

இடம்:- சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமி முன்றில்
காலம்: 12.06.2004 இன்று பி.ப. 1.30 மணி
தலைவர்: திரு.ந.கணேசமூர்த்தி (தமிழ் ஆசிரியர், ஐடியல் அக்கடமி)
பிரதமவிருந்தினர்: பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சிறப்புவிருந்தினர்கள்:
★அருட்திரு.ஜோ.அ.ஜேசுதாஸ்
(அதிபர் யா/ புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை)
★ திரு. சி.செம்மணன்
(துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்.மாவட்டம்)
★ திரு. ஆ. சுப்பிரமணியசர்மா
(பிரதேச செயலாளர், வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்)
★ திரு. எஸ்.சிவனேஸ்வரன்
(அதிபர் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)
★ பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை
(அதிபர் யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்)
★ திரு.ந. இன்பன்
(பிரதேசப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள் வலி.தென்மேற்கு)

பரிசில் வழங்கல்:
பிரதமவிருந்தினரால் க.பொ.த. சா/த பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவித்தல்.
கலைநிகழ்வு : மாணவர்களின் கலைநிகழ்ச்சி, விசேட நிகழ்ச்சியாக கல்வி நிலைய ஆசிரியர்களின் பட்டிமன்றம் நடைபெறும்.
தலைப்பு: *"இன்றைய மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பங்களிப்பவர்கள்"*
பெற்றோர்களா? ஆசிரியர்களா?
நடுவர்
திரு.அ.குமாரவேல்
(இயக்குநர் பட்டப்படிப்புக்கள் பிரிவு யாழ்ப்பாணக் கல்லூரி)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

இயக்குநர் V.N. பத்மநாதனும்
ஆசிரியர்களும்.

(32949)(29)

# மரண அறிவித்தல்

## அன்ரன் வஸ்தியாம்பிள்ளை



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும இல.65,RVE NICOLO, PARIS - 75016, FRANCE ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் வஸ்தியாம்பிள்ளை 09.06.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - எலிசபெத் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரன் - திருமதி மகேஸ்வரனின் மருமகனும் சூசைப்பிள்ளை (ஆஸ்திரேலியா - 0297502076), காலஞ்சென்ற மரியதாஸ், அனிற்றா (கனடா - 416288110) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2004) சனிக்கிழமை மாலை பிரான்ஸில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*24,சுவாட்ஸ் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.*
*026 - 2225234.* (312993)(36-29-11-18)

தகவல்:
A.செல்வம்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.அகிலன் கலந்து கொள்கிறார்.

இந்த இறுதி ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதுகிறது.

(எ-9)


## தொடர்பு கொள்ளவும்

- திருமதி மனோராணி -

திருச்சி, தமிழ்நாடு வேதாந்திரி மகரிஷி அவர்களது "வாழ்க வையகம்" அமைப்பில் இணைந்து யோகாசன ஆசிரிய பயிற்சி பெற்றவர்.

இவர், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியர் சிலருக்கு பயிற்சியும் அளித்துள்ளார்.

இவரைக் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோருகிறோம்.

**இல. - 47, பலாலி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல: 0777 - 286112
(சி-35552)(36)


## காணவில்லை

சுன்னாகம் மேற்கு, மோட்டியாங்கூடலைச் சேர்ந்த நல்லையா தயாபரன் 10.06.2004 அன்று வவுனியா - யாழ்.பயணத்தின் போது வெள்ளைநிற பொலித்தீன் பாக் ஒன்றை தவற விட்டுவிட்டார். தம்பிராசா என்பவரது பெயரில் உள்ள 6 சிறி தொடர் இலக்க காரின் பதிவுப்புத்தகமும், காப்புறுதி ஆவணங்களும் அதனுள் இருந்தன. இதனைக் கண்டெடுத்தோர் தயவு செய்து சுன்னாகம் பஸ்நிலையத்தில் உள்ள துர்க்கா புத்தக சாலைக்கு அனுப்பி உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

☎ 222 6267

(32994)(36-29-11-18)


## D.C.A.

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்

1st in Com., G.A.Q.
2005 கல்வியாண்டு

**விரைவில் ஆரம்பம்**

விவரங்கள் அடுத்த உதயனில்
பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும். வகுப்புகள யாவும் D.M.I. வெலிங்டன் சந்தி நிறுவனத்தில் நடைபெறும்.

(சி-35550)(36-29-11-18) - இயக்குநர்.

## தேவை

ரைப்செற்றிங்
(Type setting)
தெரிந்தவர்கள் நேரில் வரவும்

Sky Computers (Pvt)LTD
89, Kandy Road,
Chundikuli, Jaffna.
(Near Kachcheri)
(சி-35549)(36-29-11-18)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியுவில் இல.20 இல் மொத்தம் 10½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: ஜெயக்குமார்,
452,பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
தொலை. 0777 283636
(32985)(36)

அழகிய நினைவு மலர்களுக்கான படங்களைப் பெற்றுக்கொள்வதற்கு.
கூ.ல் லெமனேசன் படங்களுக்கு.
பிள்ளையார் அச்சகம், நல்லூர்.
ஐயர் வளவு மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,


# மரண அறிவித்தல்கள்

## திருமதி காங்கேயன் தவறஞ்சனி (ராசாத்தி)



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காங்கேயன் தவறஞ்சனி (ராசாத்தி) 09.06.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமநாதன் (காவல் துறை அதிகாரி, தமிழீழம்) மற்றும் தவமணிதேவியின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற, மின்சாரசபை பொறுப்பதிகாரி), காலஞ்சென்ற தங்கநேசம் ஆகியோரின் அன்பு மருமகளும் மற்றும் காங்கேயனின் அன்பு மனைவியும் நிறோஜாவின் அன்புத் தாயாரும் கலாறஞ்சன், ஜெயறஞ்சனி, மனோறஞ்சனி, வதனறஞ்சனி, கதிர்றஞ்சன், கயிலறஞ்சன், கமலறஞ்சன் (குமுதன் போராளி), கோகிலா (மாவீரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற முருகதாஸ் மற்றும சிவபாக்கியம், செந்தில்நாதன் (இத்தாலி), அன்னலட்சுமி, பேரின்பராணி, சறோஜினி, இராசபூபதி, காந்திமதி, கேமமாலினி ஆகியோரின அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2004) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கண்டி வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (32982)(29-11-18-36)

தகவல்:
வே.செந்தில்நாதன்
குடும்பத்தினர்.
(இத்தாலி).

## பொன்னம்பலம் இராசரத்தினம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசரத்தினம் (பெரியராசா) நேற்று (11.06.2004) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சோதிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வனும் யோகரத்தினத்தின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி(நேசம்), அருணகிரிநாதன், கணேசரத்தினம், காலஞ்சென்ற கனகசிங்கம், தங்கராணியின் அன்புச் சகோதரரும்.கிருஷ்ணாநந்தி (ஆசிரியர்/இராமநாதன் கல்லூரி), கிருஷ்ணானந்தன் (ஆசிரியர்/யாழ்.இந்துமகளிர் கல்லூரி), கிருஷ்ணவேணியின் அன்புத் தந்தையும் மாலினி(பிரதேச செயலகம், கோப்பாய்), நிறைஞ்சன் (சவுதி) ஆகியோரின் மாமனாரும் கார்த்தி, ஆர்த்தி, அபி, ஆரபி, நிலக்ஷனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2004) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கற்பகப்பிள்ளையார் கோவிலடி,*
*உடுவில் கிழக்கு,*
*உடுவில்.* (32989)(36-29-11-18)

தகவல்:
இ.கிருஷ்ணானந்தன்
(மகன்).

## கந்தையா வேலுப்பிள்ளை (இராசையா)



கச்சாய் றோட், கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தையா வேலுப்பிள்ளை(இராசையா) நேற்று (11.06.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பறுபதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்புச் சகோதரரும், தனபாலசிங்கம் (கண்டாவளை), யோகராசா (C.T.B. வீதிப் பரிசோதகர்), சகுந்தலாதேவி (கச்சாய்), குணபாலசிங்கம் (சுவிஸ்), பூபாலசிங்கம் (ஜேர்மனி), நற்குணசிங்கம் (லண்டன்), ஜெயசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரமேஸ்வரி, திலகவதி, தயாபரன், லோகேஸ்வரி, சகுந்தலசெல்வி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாசினி, நிமாலினி, சுபனராஜ், பிரபாகரன், பிரசன்னா, பிரமிகா, பிராப்த்தன், துஷியந்தன், கஜந்தன், துஷாயினி, துசிந்தா, தர்மிகா, துசி, கீர்த்திகா, கிருசாந்தன், கஜிதன், தன்சயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கச்சாய் றோட்,*
*கொடிகாமம்.*
T.P. 0777 667484 (32991)(36-29-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கிருஷ்ணபிள்ளை தேவராணி (வள்ளியம்மா)

பத்தைமேனியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் 215, வவுனிக்குளத்தில் வசித்தவருமாகிய திருமதி கிருஷ்ணபிள்ளை தேவராணி (வள்ளியம்மா) 11.06.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோவிலடி,*
*அச்சுவேலி,*
*0776144776.* (32995)(36-29-11-18)

தகவல்:
கி.தவராசா(தவம்)
மகன்.

## வேலுப்பிள்ளை நமசிவாயம் (கட்டடக் கலைஞர்)

தேத்தாவடி, இடைக்காடு - அச்சுவேலியைச் சேர்ந்த வேலுபிள்ளை நமசிவாயம் நேற்று (11.06.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கதிராசுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் செல்லம்மாவின் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் Dr. சரஸ்வதியின் தகப்பனரும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நமசிவாயம், கதிர்காமு மற்றும் திருநாவுக்கரசு, சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாமித்திடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம.

*தேத்தாவடி,*
*இடைக்காடு,*
*அச்சுவேலி.* (32992)(36-29-11-18)

தகவல்:
ந.தாமோதரன்
(பேறாமகன்).

## சித்திரவதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பவர் வவுனியாவைச் சேர்ந்த பிரஸ்தாப பெண்ணைத் திருமணம் செய்தார். அவர் மூலம் மூன்று பிள்ளைகளைப் பெற்றார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாபப் பெண்ணுக்கும் கணவனுக்கும் இடையில் அடிக்கடி தகராறு ஏற்படுவது வழக்கம். சம்பவதினம் அவரை கணவர் கண்மூடித்தனமாக அடித்து உடலில் காயங்களை ஏற்படுத்தினார். அதன் காரணமாக அவர் மரணமானார் என்றும் விசாரணையில் சாட்சியங்கள் தெரிவித்தன.

யாழ் ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி தமது அறிக்கையில் பிரஸ்தாப பெண்ணின் உடலில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டன. சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான தடயங்களும் காணப்பட்டன. இதன் காரணமாக மரணம் சம்பவித்தது என்று தெரிவித்தார். இதையடுத்து, மரணமானவரின் கணவரை கைதுசெய்யுமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

பின்னர், அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியாவில் உள்ள பிரஸ்தாபப் பெண்ணின் உறவினர்கள் நேற்று நீதிமன்றத்துக்கு வந்தனர். சடலத்தை அவர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். அவரின் மூன்று குழந்தைகளையும் அழைத்துச் செலலுமாறும் நீதி வான் அவர்களிடம் தெரிவித்தார். (எ-3-9-15)


**MCTC**
அரசடி, நவாலி.
**SPOKEN and GRAMMAR**
By: BRITTO
புதிய பிரிவு: செவ்வாய், வியாழன்.
ஆரம்பம்: 15.06.2004
நேரம்: காலை 6.30
(புதிய நேரம்) (32973)


## அந்தோனியார் உற்சவம் தென்றலில் விசேட நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூன்12

பாஷையூர் மற்றும் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயங்களின் உற்சவத்தை ஒட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 1.30 மணி முதல் 2.30 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலை வரிசையில் விசேட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் இருந்து 'தென்றலில உலா வரும் வாழ்த்து' அந்த விசேட நிகழ்ச்சியில் இடம்பெறும்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் லூக்கஸ பெர்னாண்டோ விசேட நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார். (எ-3)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறியல் கல்லூரியில் வைத்துப் படையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பயிற்சிகள் அடுத்த ஓிரு வாரங்களில் பூர்த்தியானதும், மோப்ப நாய்கள் படை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவிருக்கின்றன.

படை அதிகாரிகளே இந்த மோப்ப நாய்களைக் கொண்டு கண்ணிகளைக் கண்டுபிடிக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பர்.

அமெரிக்க உதவியுடன் படையினருக்கு கண்ணி அகற்றுவது தொடர்பான பயிற்சிகளை அளிக்க அமெரிக்கா 35 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் பணிக்கு உதவும் மற்றுமோர் உதவி நிறுவனப்பிரதிநிதிகள் இன்று யாழ். செயலகத்துக்கு வருகை தரவிருக்கின்றனர். (எ-3)


**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**இணைந்த கணிதம்**
2004 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள்

| பிரிவு - I | பிரிவு - II |
|---|---|
| ★ அனைத்து அலகுகளும் உள்ளடக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் செயயப்படுகிறது. திங்கள், செவ், புதன், வியா, வெள். (6.00 - 7.00 - a.m. - பழைய நேரம்) | ★ அலகு ரீதியான மீட்டல் வெளிமாட்ட மாணவர்களுக்குமானது. (அனைத்து அலகுகளும் மீட்கப்படும்) திங்கள், செவ், புதன். (4.00 - 6.00 - p.m. - பழைய நேரம்) |

ஆரம்பம் : 2004-06-14
By: P. செந்தில்நாதன் B.Sc. (32948)



**CAREER .COM INSTITUTE**
aat - 2004 December
cat - 2005 January
cma - 2005 March
பரீட்சைக்குரிய விரிவுரைகள் நடைபெறுகின்றன.
விரையுங்கள்
**100%** Free for A/L 2004 Students untill getting A/L Result.
Office Hour : Mon, Wed, Fri, Sat, Sunday, 10.a.m. - 2.00 p.m. (சி-35535)
No: 79, Main St. Jaffna.



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**Dip. in Hardware Engineering** ஒரு மாதம்
இக்கற்கை நெறிக்கு லண்டன் C.C.L பல்கலைக்கழகத்துடன் இணைந்து அல்லது IRISH INTERNATIONAL UNIVERSITY ஆல் அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATE வழங்கப்படும்.
Graduate Ship in Hardware Eng. ஒரு வருடம் இக்கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு Institute of British Engineers நிறுவனத்தினால் CERTIFICATE வழங்கப்படும். உயர் கல்வியை தொடர விரும்புகிறவர்களுக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான VISA வழங்கப்படும்.
பயிற்சி நெறிக்கான பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.
Head Office: **NORTH LANKA** பிரதான வீதி, சங்கானை.
Branch: கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி. (32963)


## புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துக்கு வண.அக்மீமன தேரர் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பதவியிழந்த ரத்னசீஹ தேரர் நீதிமன்றத்தில் தமது மனு ஊடாக முறைப்பாடு செய்திருந்தார்.

தம்மிடமிருந்து பலவந்தமாக பெறப்பட்ட கடிதத்தை செல்லுபடியற்றதாக உத்தரவிடும்படியும் -

வண.அக்மீமன தயாரத்ன தேரர் தமது இடத்துக்கு எம்.பியாகப் பதவியேற்பதை இடைநிறுத்தும்படியும் -

அவர் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதைத் தடுக்கும்படியும் - வண. ரத்னசீஹ தேரர் தமது மனுவில் கோரியிருந்தார்.

அந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம் வண.அக்மீமன தயாரத்ன தேரர் புதிய எம்.பியாகப் பதவியேற்பதற்கு கடந்த 4ஆம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால் இந்த இடைக்காலத் தடை உத்தரவு வண.அக்மீமன தயாரத்ன தேரருக்கோ அல்லது சபாநாயகருக்கோ நீதிமன்றத்தினால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படாத நிலையில் கடந்த செவ்வாயன்று வண. அக்மீமன தயாரத்ன தேரர் புதிய எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அதை ஆட்சேபித்து ஆளும் கட்சி எம்.பிக்கள் நடத்திய ரகளையால் நாடாளுமன்றம் போர்க்களமானது தெரிந்ததே.

இந்த வழக்கு நேற்று மீண்டும் நீதிமன்றத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வண. தயாரத்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதை தடுப்பதற்கான தனது உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எதிர்வரும் 25ஆம் திகதிவரை நீடித்தது.

அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண.ஓமால்பே சோபித்த தேரர், வண. கொலன்னாவ சுமங்கள தேரர் ஆகியோருக்கும் நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## அமுக்கவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களே நிரம்பிய பெண் குழந்தை ஒன்றின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களின் சடலங்கள கிளிநொச்சி காவல்துறையினரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் தயாரத்னவின் சடலத்தை இன்று அவரது சொந்த இடத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கிளிநொச்சி காவல்துறையினர் தெரிவித்தனர். (எ-3)

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெர்னாண்டோ புள்ளேயும் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

அமைச்சரும் அதே கருத்தினை அங்கு வழிமொழிந்தார். மக்களிடம் மீண்டும் சென்று பெரும்பான்மைப் பலத்துடன் திரும்பிவந்து ஆட்சி அமைக்க முடியும் என்று தாம் நம்புகிறார் என அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை இருவரும் இணைந்து மறுத்தனர். அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என அவர்கள் அடியோடு மறுத்தனர். (க)


**அறிவொளி** (நல்லூர்)
**PHYSICS** (யாழ். முன்னணி ஆசிரியர்)
திரு. ம.ஸ்பெல்மன்
**A/L - 06 அலைகளும் அதிர்வுகளும்**
ஆரம்பம்: 13.06.2004-4.30 p.m. ஞாயிறு (சனி, ஞாயிறு மட்டும்)
(A/L 05 வெளிமாவட்ட மாணவர்களுக்கும் உகந்தது)
**A/L - 05 வெப்பவியல்**
(வெளிமாவட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க)
ஆரம்பம்: 13.06.2004-3.30 p.m. ஞாயிறு (சனி, ஞாயிறு மட்டும்)
குறிப்பு: மாணவர்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு. ஒவ்வொரு கிழமையும் பரீட்சை நடத்தப்பட்டு புள்ளிகள் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்படும். (32967)


# தன்னாட்சி அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய இரு கட்சிகளினதும் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய உயர் மட்டக் குழுவினரே - அரச உயர் பதவிகளுக்கான நியமனங்கள் மற்றும் சமாதானப் பேச்சு உட்பட சகல தேசியப் பிரச்சினைகள் தொடர்பாகவும் - பரிசீலித்து தீர்மானிக்க வேண்டும்.

இதுவே ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாடு.

ஆனால், "இடைக்கால நிர்வாகம் குறித்து முதலில் பேச ஜனாதிபதி தயார்" என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறியதாக ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

இதைக்கூட ஜனாதிபதி செயலகமோ அல்லது அரசுப் பேச்சாளரோ எமக்குத் தெரியப்படுத்தவில்லை.

அண்மைக்காலங்களில் அரசின் செயற்பாடுகளில் பெரும் மாற்றம் காணப்படுகிறது.

எதிர்வீட்டில் நிரந்தரமாக இருக்கும் இ.தொ.காவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், இழுத்துப் பிடித்து அரவணைப்பதில் உள்ள ஆர்வம் உள்வீட்டிலேயே இருக்கும் ஜே.வி.பியினர் மீது காட்டப்படவில்லை என எமது ஜே.வி.பியின் தீவிர உறுப்பினர்கள் குறைகூறுகின்றனர்.

தமிழ் மக்களின் குடியிருப்பு, விவசாயம், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி வசதி மற்றும் பொது வசதிகள் தொடர்பாக இடைக்கால ஏற்பாடுகள் செய்யப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. அதேவேளை சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதற்கும் ஆட்சேபனை இல்லை.

ஆனால், புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை கடல் பரப்பு, பாதுகாப்பு, காணி, இராணுவம், நியமனங்கள் - என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஆரம்பம் முதலே புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் - தனிநாட்டுக்கான அடித்தளம் என்பது உறுதி. அதனால்தான் அதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். அதனை ஜனாதிபதியிடமும் பகிரங்கமாகவும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது. இப்படியான நிலையில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முதலில் பேசத் தயார் என ஜனாதிபதி உறுதியளித்திருப்பது எங்களைச் சிந்திக்க வைத்துள்ளது.

ஜனாதிபதி அப்படி ஒரு செயலில் தன்னிச்சையாக இறங்குவாரேயானால் அதனை நாம் வன்மையாக எதிர்ப்போம்.

ஒரு நாட்டின் தலைவி என்ற முறையில் ஜனாதிபதி எக்கட்சியுடனும் எவருடனும் - பேசலாம். இது ஒரு ஜனநாயக நாடு. அந்த உரிமை எல்லோருக்கும் உண்டு.

ஆனால், இன்று சர்வதேச மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் முக்கிய பங்காளிகளான எங்களை உதாசீனப்படுத்துவதை அனுமதிக்கமுடியாது - என்று ஜே.வி.பியின அந்த சிரேஷ்ட உறுப்பினர் கூறினார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மறுபுறத்தில் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும் அரசுக்கு எதிராக நெருப்பெடுத்திருப்பது அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (...)


**பொதுமக்களின் பார்வைக்காக 'கிறீன் பார்க்'**
இல.: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில்
★ 'கிறீன் பார்க்' ★
மீண்டும் பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. (புதிய நேரம்)
இங்கே.... ★ செவ்வரத்தை ★ முசண்டாஸ போன்ற ஏனைய பூங்கன்றுகளும விற்பனைக்கு உண்டு.
☞ புகைப்படங்கள் எடுக்கவும் வீடியோப்படம் பிடிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (32940) - உரிமையாளர்.


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை துரைராஜா

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும் நிவித்திகலை பி.எஸ்.வர்த்தக நிலைய முன்னாள் முகாமையாளருமான வேலுப்பிள்ளை துரைராஜா அவர்கள் வியாழக்கிழமை 10.06.2004 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி (கொழும்பு), சாந்தகுமார் (கனடா), மாலினி (கனடா), விமலினி (இந்தியா), காமினி (கனடா), பிரேம்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளானந்தம் (கொழும்பு), ஜெயரூபா (கனடா), பாலேந்திரன் (கனடா), சுகந்தன் (இந்தியா), ரட்ணராஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும் விஜிதா, திவ்வியா, தனுஜா, தினேஸ், டினேஸ், கௌதமன, லாவண்யா, றொஷான், பிரியங்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.* (C/35553)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### செல்லத்துரை சரஸ்வதி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சரஸ்வதி அவர்கள் வியாழக்கிழமை 10.06.2004 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.06.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*செல்வமகால்,* சி.செல்லத்துரை (கணவர்),
*கைதடி வடக்கு,* செ.குணபாலசிங்கம் (மகன்) T.P.: 0776165405,
*கைதடி.* செ.தனபாலசிங்கம் (கிளி-மகன்)
(32997) T.P.: 0777 427181.

### திருமதி தையல்நாயகி கதிரவேல்

இல.10, வைமன் வீதி, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையலநாயகி கதிரவேல் நேற்று (11.06.2004) சனிக்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (32998)

தகவல்:
திருமதி நளினி ஜெயபாலன் (மகள்).


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**சான்றிதழ் வழங்கல்**
எமது நிறுவனத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து
சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் அலுவலகத்துடன்
தொடர்பு கொள்ளவும்

MCS


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.